3-ஆம் பதிப்பு

உ

திருச்செந்திலாண்டவன் துணை

அபிராமி அந்தாதியும் அபிராமியம்மை பதிகங்களும்

(பொழிப்புரையுடன்)

திருப்பனந்தாள் காசித்திருமடம்

இருபத்தொன்றாவது அதிபர்

"கயிலைமாமுனிவர்"

திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்

அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெற்றது.

1996

விலை ரூ. 4—00

காசித்திருமடம்] [திருப்பனந்தாள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

அபிராமி அந்தாதியும் அபிராமியம்மை பதிகங்களும்

(பொழிப்புரையுடன்)

திருப்பனந்தாள் காசித்திருமடம்

இருபத்தொன்றுவது அதிபர்

"கயிலைமாமுனிவர்"

திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்

அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெற்றது.

1996

பொழிப்புரை:

டாக்டர். ம. வெள்ளைவாரணம்

திருப்பனந்தாள்

விலை ரூ. 4—00

காசித்திருமடம்] [திருப்பனந்தாள்

திருச்செந்திலாண்டவன் துணை

முதற்பதிப்பின் முன்னுரை

சொல்லும் பொருளும் என நட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே! நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

சைவ சமயக் குரவர்களாலும் அவர்களின் அருள் வழிவந்த அருளாளர்களாலும் திருமுறைகள், சைவசித்தாந்தப் பெருநூல்கள் புராணங்கள், பிரபந்தங்கள், பதிகங்கள் முதலியவை அருளிச் செய்யப் பெற்றுள்ளன. அவைகள் மெய்யுணர்வையும் பக்தி நலத்தையும் விளைவிப்பதோடு வாழ்க்கைக்கு வேண்டிய அறநெறி களையும் எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன.

திருப்பனந்தாள் காசித்திருமடத்து அதிபர் திருவளர்திரு **காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** திருவருள் நோக்கத்தோடு திருமுறைகள், ஞான நூல்கள், அருள்திரு குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள் முதலானவற்றை வெளியிட்டு அடக்க விலையில் வழங்கி வருவதைத் தமிழ்ச் சைவ உலகம் நன்கு அறியும்.

திருக்கடவூர் அபிராமிப்பட்டரால் அருளிச் செய்யப் பெற்ற அபிராமி அந்தாதியையும், அபிராமி அம்மை பதிகங்களையும் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து" சொல்லின் பெருநலம் பயக்கும் என்று திருவளர்திரு காசிவாசி சுவாமிகள் அவர்கள் திருவுளம் பற்றி, மூல பாடம் இடது புறத்திலும், தெளிவுரை நேர் எதிரான வலது புறத்திலும் அமையுமாறு இந்நூலை வெளியிடுமாறு ஆணை பிறப்பித்தார்கள். அவ்வருளாணையின் வண்ணம் இந்நூல் வெளிவருகிறது. இந்நூலுக்குத் தெளிவுரை எழுதிய திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி முன்னாள் பேராசிரியர் **திரு. நா. ம. வெள்ளைவாரணம்** அவர்களுக்கும், அச்சுப்படிகளைத் திருத்தி உதவிய எம். குஞ்சிதபாதம், புலவர், அர. சிவப்பிரகாசம் ஆகியோர்க்கும் செந்திலாண்டவன் திருவருள் உண்டாவதாக.

இந்நூலை அன்பர்கள் பொருளுணர்ந்து நாளும் ஓதி நலம் பெறுவதே திருவளர்திரு காசிவாசி சுவாமிகள் அவர்களுக்குச் செய்யும் கைம்மாறாகும்.

இங்ஙனம்

திருப்பனந்தாள். } **கு. சுந்தரமூர்த்தி**, எம். ஏ., பிஎச்டி.
முன்னாள் முதல்வர்.

அபிராமிப் பட்டர் வரலாறு

அபிராமிப் பட்டர் தஞ்சை மாவட்டத்தில் திருக்கடவூரில் அந்தணர் மரபில் அமிர்தலிங்க ஐயர்க்கு மகனாகப் பிறந்தார். வடமொழி தென்மொழிகளில் வல்லவர். தந்தையாரிடம் உபதேசம் பெற்றுப் பரமாகம பத்ததிப்படி ஸ்ரீ சக்ர வழிபாட்டினைச் செய்து வந்தவர். அடிக்கடி யோகத்தில் திளைப்பவர், அதனால் இவர் உலகத்தார் கண்ணுக்குப் பித்தராகக் காணப்பட்டார்.

ஒருசமயம் அமாவாசையன்று சரபோஜி மன்னன் திருக்கடவூருக்கு வந்தான்; அபிராமி சந்நிதியில் யோகத்தில் இருந்த பட்டரைக் கண்டு ''இவர் யார் என்று'' வினவினான். அருகில் இருந்தவர்கள் ''இவர் வேதநெறிக்கு மாறுபட்டு மது மாமிசம் அருந்துகிறவர்'' என்றார்கள். அரசன் பட்டரை எழுப்பி ''இன்று அமாவாசை எத்தனை நாழிகை வரை உள்ளது'' என்றான். யோகத்தில் திளைத்திருந்த பட்டர் ''இன்று பௌர்ணமியல்லவா'' என்றார். அரசன் வெகுண்டு ''இன்றைக்குச் சந்திரன் எழுந்து நிலவு வீசாவிட்டால் நாளைக்கு உம்மைச் சிரச்சேதம் செய்வோம் என்று கூறிவிட்டு அப்பாற் சென்றான்.

பட்டர் சுயநினைவு பெற்று நடந்ததை அறிந்து சற்று வருந்தினார். பின்னர் அபிராமியே துணை என்று உட்கொண்டு அபிராமி சந்நிதி முன்னர் அக்னி குண்டம் அமைத்து மேலே உறிகட்டி அதில் ஏறி அரிகண்டம் பாட எண்ணி அபிராமி பேரில் அந்தாதி பாடத் தொடங்கி ஒரு பாடலுக்கு ஒருகயிறு வீதம் உறிக்கயிற்றை அறுத்து விட்டார். 79ஆம் செய்யுளை ''விழிக்கே அருள் உண்டு அபிராம வல்லிக்கு'' என்று தொடங்கியவுடன் அபிராமியம்மை தனது தோடு ஒன்றைக் கழற்றி விண்ணில் வீசி எறிந்தாள். அது முழுமதியாக நின்று நிலவொளி வீசியது. அரசன் நிலவொளி கண்டு வியந்து ஓடிவந்து பட்டரை உறியிலிருந்து இறங்கச் செய்து அவரது அடியில் வீழ்ந்து வணங்கினான். தனது பிழை பொறுக்க வேண்டினான். பட்டர் ஏனைய பாடல்களையும் பாடி அந்தாதியை நிறைவு செய்தார்.

அபிராமிப் பட்டர் அபிராமி அந்தாதியேயன்றிக் கள்ளவாரணப் பிள்ளையார் பதிகம், அமுதகடேசுவரர் பதிகம் கால சங்காரமூர்த்தி பதிகம், அபிராமியம்மை பதிகங்கள் முதலியனவும் பாடியுள்ளார். இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

தல வரலாறு

திருக்கடவூர் என்னும் தலம் தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்குத் தென்கிழக்கே 22கி.மீ தொலைவில் உள்ளது திருக்கோயில் மேற்குப் பார்த்தது எட்டு வீரட்டங்களில் ஒன்று மார்க்கண்டேயரைக் காக்கும் பொருட்டு எமனை உதைத்த வீரம் நிகழ்ந்த தலம் இறைவன் திருநாமம்-அமிர்தகடேசுவரர்: இறைவி திருநாமம்-அபிராமியம்மை காலசம்ஹாரமூர்த்தி சந்நிதிவிசேடம் குங்குலியக்கலயர், அபிராமி பட்டர் முதலியோர் வாழ்ந்த தலம்.

அபிராமி அந்தாதி

மூலம்

(காப்பு)

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத் துமைமைந்தனே! உலகேழும் பெற்ற
சீரபிராமி அந்தாதி எப்போதும்என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்கக் கட்டுரையே.

(நூல்)

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயம் என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. 1

துணையும் தொழுநதெய்வமும் பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையும்மென் பாசாங் குசமும்கையில்
அணையும் திரிபுர சுந்தரிஆவது அறிந்தனமே. 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே! வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமைஎண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே. 3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே. 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே. 5

அபிராமி அந்தாதி

(தெளிவுரை)

காப்பு

கொத்தாக அமைந்த கொன்றையையும், சண்பகமலர் மாலையையும் அணிகின்றதில்லைப்பெருமானுக்கும் உமாதேவிக்கும் மூத்த மகனே! கரிய திருமேனியையுடைய கணபதியே! ஏழுலகையும் பெற்ற சிறப்புடைய அபிராமியம்மைபேரில் பாடப்பெற்ற அந்தாதிப் பாடல்கள் எப்போதும் என் நினைவில் நிற்கும்படி ஆணையிட்டருள்க,

1. ''எழுகின்ற செஞ்ஞாயிற்றையும் உச்சிக்காலத்து மஞ்சாடிப் பூவையும் கற்றோர் மதிப்பிடுகின்ற மாணிக்கத்தையும் மாதுளம் பூவையும், செந்தாமரைத் திருவால் போற்றப்படும் மின்னற்கொடியையும், மணம் வீசும் குங்குமக் குழம்பையும் போன்றது'' என்று ஆகமங்களால் வரையறுக்கப்படுகின்ற செம்மேனியையுடைய அபிராமியம்மை எனக்குச் சிறந்த துணையாவாள்.

2. குளிர்ந்த மலரம்புகளையும், கரும்பு வில்லையும், பாசத்தையும் அங்குசத்தையும் திருக்கரங்களில் ஏந்திய திரிபுரசுந்தரியான அபிராமி எனக்கு உயிர்த்துணையும், வழிபடு கடவுளும், பெற்ற தாயும், வேதங்களின் சாகைகளும், வேதக் கொழுந்தான உபநிடதங்களும், வேதமூலமான பிரணவமும் ஆக இருப்பதை அறிந்து கொண்டேன்.

3. திருவருட் செல்வியான அபிராமியே!வேறெவரும் அறியாத இரகசியத்தை நான் அறிந்தேன். அங்ஙனம் அறிந்து நின் திருவடியில் மனம்பொருந்தினேன். மேலும் உனது அன்பரின் பெருமையை மதிக்காத தீய எண்ணத்தால் இனி விழப்போகும் நரகத்தோடு உறவு கொண்ட மனிதர்களைக் கண்டு அஞ்சி அவர்களை விட்டுப் பிரிந்துவிட்டேன்.

4. மண்ணக மனிதரும் விண்ணகத்தேவரும் இறவாவரம் பெற்ற முனிவரும் நின்முன்வந்து தலைதாழ்த்தி வணங்கும் சேவடிகளை உடைய இளையோளே! கொன்றையணிந்த சடைமேல் குளிர்ந்த பிறையையும் பாம்பையும் கங்கையையும் வைத்துள்ள தூயோரான சிவபெருமானும் நீயும் எப்போதும் என்னறிவில் பொருந்தியிருப்பீராக.

5. எங்கும் வியாபித்துள்ள திரிபுரையே! சிமிழை ஒப்பாகச் சொல்லும் இரண்டு நகிற்சுமையால் வருந்தும் வஞ்சிக்கொடி போன்ற இடையையுடைய மனோன்மணியே! சிவனார்உண்ட நஞ்சத்தை அமுதமாக ஆக்கிய அம்பிகையே! தாமரைக்கும் மேலாக அழகினால் திருந்திய சுந்தரியே! உன் திருவடிகள் என் தலைமேல் உள்ளன.

சென்னிய துன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன் திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடி யாருடன்கூடி முறைமுறையே
பன்னிய தென்றும் உன்றன் பரமாகம பத்ததியே. 6

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துரானன சுந்தரியே!. 7

சுந்தரி! எந்தை துணைவி! என்பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி! சிந்துர வண்ணத்தினள்! மகிடன் தலைமேல்
அந்தரி! நீலி! அழியாத கன்னிகை! ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள்! மலர்த்தாள் என் கருத்தனவே. 8

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும்அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம்மே! வந்தென் முன்நிற்கவே. 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே! அருளே! உமையே! இமயத்
தன்றும் பிறந்தவளே! அழியாமுத்தி ஆனந்தமே! 10

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான் வடிவுடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம், தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம் பிரான்முடிக் கண்ணியதே. 11

கண்ணிய துன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய துன் இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணிய துன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏதென் அம்மே! புவிஏழையும் பூத்தவளே! 12

6. சிந்தூரம் போன்ற செந்நிறம் வாய்ந்த அபிராமியே! என் தலைமேல் இருப்பது உனது பொன்னுர் திருவடித் தாமரை; என் நெஞ்சில் நிலைத்திருப்பது உனது மந்திரம்; நின் அடியாருடன் சேர்ந்து நான் எப்போதும் பாராயணம் செய்வது உனது மேலான ஆகம நெறிகளையேயாகும்.

7. தாமரையில் இருக்கும் நான்முகனும், பிறைசேர்ந்த சடையையுடைய நின் கணவனும், திருமாலும் எப்போதும் தொழுது துதிக்கும் சேவடிகளையுடையாளே! சிந்தூரப் பொட்டணிந்த திருமுகமுடைய சுந்தரியே! தயிரில் சுழலும் மத்தைப்போல் பிறவியில் சுழலும் எனது உயிர் பிறப்பால் தளராதபடி ஒப்பற்ற உயர்கதியை அடையும்படி திருவுளம் பற்றுவாயாக.

8. சுந்தரியே! எந்தையாகிய சிவனுர்க்கு மனைவியே! எனது பாசத்தொடரனைத்தையும் வந்து அரிகின்றவளே! சிந்தூரம் போன்ற செந்நிறத்தவளே! மகிடாசுரனின் தலைமேல் நிற்கும் அந்தரியே! நீலியே! அழியாத கன்னிகையே! நான்முகனின் தலையோட்டினை ஏந்திய திருக்கரத்தை உடையவளே! உன் திருவடித் தாமரைகள் என்றும் என் நினைவில் உள்ளன.

9. அபிராமித்தாயே! எந்தையான சிவனுரின் திருவுளத்தில் உள்ளனவும், அவரது கண்களில் உள்ளனவும், மேருவைப்போல் பெருத்துள்ளனவும், அமுத சீர்காழிப் பிள்ளைக்குப் பால் கொடுத்தனவும் ஆகிய பேரருள்மிக்க தனபாரமும், முத்துமாலையும் செங்கையில் ஏந்திய கரும்பு வில்லும் மலரம்பும்மயிலிறகின் அடிபோன்ற பறகளும் (ஆகியவற்ருேடு) நீயும் என் முன் வந்துநின்று காட்சி தருவாயாக.

10. எழுதப்படாத வேதத்திற்பொருந்திய அறிதற்கரிய பொருளே! திருவருளே! உமாதேவியே! முன்பொரு சமயம் இமய மலையில் தோன்றியவளே! அழிவற்ற முத்திப் பேற்றின் இன்பமே! நான் நின்ருலும் இருந்தாலும் படுத்தாலும் நடந்தாலும் நினைப்பது உன்னையேதான்; அங்ஙனமே எப்போதும் வணங்குவதும் உன் திருவடித்தாமரைகளையே ஆகும்.

11. எனக்குப் பேரின்பமாகி, என் அறிவுமாகி, என் புருவ மத்தியில் நிறைந்த அமுதமுமாகி, வானத்தின் எல்லையுமான வடிவுடைய அபிராமியின் திருவடிகள். அதாவது நான்கு வேதத்துக்கும் முடிவாயுள்ள திருவடித் தாமரைகள் வெண்மையான சாம்பற் காட்டை ஆடும் அரங்கமாகவுடைய சிவபெருமானின் திருமுடியில் அணியும் மாலையாகும்.

12. என் தாயே! ஏழுலகையும் பெற்றவளே! நான் நினைப்பது உன் புகழைத்தான்; நான் கற்று வருவது உன் நாமங்களைத்தான்; நான் உளமுருகிப் பக்தி செய்வது உன் திருவடித் தாமரைகளில் தான் நான் பகலிரவாகக் கூடியிருப்பது உன்னை விரும்பும் அடியார் கூட்டத்தில்தான் இப்பேறு பெறுதற்கு நான் முற்பிறவியில் செய்த புண்ணியம்தான் யாதோ?

பூத்தவளே! புவனம்பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே! பின்கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற் கிளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே 13

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்கெளிதாம் எம்பிராட்டி! நின் தண்ணளியே.14

தண்ணளிக் கென்றுமுன்னே பலகோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார் மதிவானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடு மன்றோ!
பண்ணளிக்கும சொற்பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

கிளியே! கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்கிடமே! எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே! வெளிமுதற் பூதங்களாகி விரிந்தஅம்மே!
அளியேன் அறிவள விற்கள வான ததிசயமே. 16

அதிசய மான வடிவுடையாள்! அரவிந்தமெல்லாம்
துதிசய வானன சுந்தரவல்லி! துணை இரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாக அன்றோ வாம பாகத்தை வவ்வியதே. 17

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
செவ்விய காலன்என் மேல்வரும்போது வெளிநிற்கவே.18

வெளிநின்ற நின் திரு மேனியைப் பார்த்தென விழியும்
நெஞ்சும்
களிநின்றவெள்ளம் கரைகண்டதில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே! 19

13. பதினான்கு உலகங்களையும் படைத்தவளே! படைத்த வாறே காத்தும் வருபவளே! பின் சர்வசங்கார காலத்தில் மாயையுள் ஒடுக்கி மறைப்பவளே! நீலகண்டனான சிவனுக்கு மூத்தவளே! திருமாலுக்குத் தங்கையே! பெரிய தவம்செய்தவளே! (அபிராமியே) உன்னை அல்லாமல் வேறோர் தெய்வத்தை நான் வணங்குவதுண்டோ?

14. எம்பெருமாட்டியே! உன்னை வணங்குபவர்கள் தேவர்களும் அசுரர்களும் ஆவர்; உன்னைத் தியானிப்பவர்கள் நான்முகனும் திருமாலும் ஆவர்; உன்னை நினைவில் அழுந்தப் பற்றியவர் அழியாப் பரமானந்தரான சிவனார் ஆவர். அவர்கட்கு எளிதில் கிட்டாத நின் திருவருள், உலகில் உன்னைத் தரிசிக்கும் மக்களுக்கு எளிதில் கிட்டிவிடும்.

15. பண்போன்ற இன்சொல்லும் இயற்கை மணமுடைய யாமளையான பசுங்கிளியே! உன் திருவருட்பேற்றிற்காகப் பல பிறவிகளில் பல்கோடி தவங்களைச் செய்தவர்கள் பூலோகபோகத்தை மட்டுமோபெறுவார்? தேவர்களின் சொர்க்க போகத்தையும் பெறுவர்! அதன்பின் அழியாத முத்தி இன்பத்தையும் பெறுவர்.

16. கிளி போன்றவளே! உனக்குறவான அடியார் உளத்தில் பொருந்திப் பொலியும் ஒளியே! ஒளிக்கெலாம் இருப்பிடமே! ஆராயுமிடத்து ஒன்றுமில்லாத பரவெளியே! விண்முதலான ஐம் பூதங்களாக விரிந்த அன்னையே! (அங்ஙனம் பெரிய நீ) இரங்கத்தக்க சிறியேனின் சிற்றறிவின் எல்லைக்கு உட்பட்டது வியப்பாக வன்றோ இருக்கிறது.

17. வியப்பான திருவுருவம் உடையாளே! தாமரைகள் போற்றும்படி வெற்றி கொண்ட திருமுகமுடைய சுந்தரவல்லியே! இரதிக்குக் கணவனான மன்மதனின் வெற்றியெலாம் தோல்வியாகும் படி முன்பொரு சமயம் நெற்றிக் கண்ணால் பார்த்த சிவனது திறமையை நீ வெற்றி கொள்வதற்காகவா, அச்சிவனது இடப் பாகத்தைக் கவர்ந்து கொண்டாய்?

18. (அபிராமியே!) உன்னால் கவரப்பட்ட இடப்பாகத்தையுடைய சிவனும் நீயும் மனமகிழ்ந்திருக்கும் தோற்றமும், உங்களுடைய திருமணக்கோலமும், என் உள்ளத்து வஞ்சத்தை நீக்கி ஆட்கொண்ட திருவடிகளுமாகி வந்து வெளிப்பட்டு நிற்க வேண்டும்; அதாவது கொடிய எமன் என்னுயிரைக் கவரவரும்போது வெளிப்பட்டு நிற்க வேண்டும்

19. ஒளிமிக்க ஒன்பது கோணங்களில் தங்கி இருப்பவளே! என்முன் காட்சி தந்த உன் திருமேனியைக் கண்டதால் என் கண்களிலும் மனத்திலும் நிறைந்த இன்ப வெள்ளத்துக்குக் கரையே இல்லை; மேலும் என் எண்ணத்தில் தெளிந்த மெய்யுணர்வு விளங்குகிறது. (இங்ஙனம்யான் சிறப்பெய்த நீ செய்த) திருவுள்ளக் குறிப்புத்தான் என்னவோ?

உறைகின்ற நின் திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே; 20

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும்பெண்கொடியே 21

கொடியே! இளவஞ்சிக் கொம்பே! எனக்கு வம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!
அடியேன் இறந்திங் கினிப்பிறவாமல்வந்தாண்டுகொள்ளே. 22

கொள்ளேன்மனத்தில்நின்கோலமல்லாது; அன்பர்கூட்டம்தன்னை
விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன் மூவுலகுக்
குள்ளே! அனைத்தினுக்கும் புறம்பே! உளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளியஎன் கண்மணியே. 23

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்கழகே! அணுகாதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே. 24

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதல்மூவருக்கும்
அன்னே! உலகுக் கபிராமி என்னும் அருமருந்தே!
அன்னே இனி, உன்னை யான்மறவாமல்நின் றேத்துவனே. 25

ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ்பூங்கடம்பு
சாத்தும் குழலணங்கே! மணம் நாறுநின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே 26

20. நிறைந்த நித்திய மங்கலையே! நீ எழுந்தருளும் திருக் கோயிலானது உன் கணவனின் இடப்பாகமா? நான்முகன் முதலியோர் ஓதுகின்ற வேதத்தின் தொடக்கமா? அவ்வேதத்தின் முடிவா? அமுதம் நிறையும் சந்திரனா? வெண்டாமரை மலரா? இந்திரனின் செல்வம் விழுந்து மறைந்த திருப்பாற்கடலா? அல்லது அடியேனது உள்ளமா?

21. பசிய பெண்கொடியான அபிராமியம்மை, நித்திய சுமங்கலையாவாள்; சிவந்த குடம்போன்ற நகிலுடையாள்: சங்கு வளையல் அசையும் செங்கைகளை உடையாள்; அனைத்துக் கலைகளின் சாயலானவள்; கங்கைச் சடையானின் இடப் பாகத்தாள்; அடியேனை அடிமையாக உடையாள்; மற்றும் அவள் பொன் நிறத்தள; கரு நிறத்தள்; செந்நிறத்தள் ஆவாள்.

22. வஞ்சிக்கொடியே! அக்கொடிபடர்ந்த கற்பகக்கொம்பே! எனக்கென்று புதிதாய்ப் பழுத்த படிவமே! நான்மறையின் நறுமணமே! இமயத்தில் விளையாடும் இளமென்பிடியே! நான் முகன் முதலிய விண்ணோரைப் பெற்றதாயே! அடியேன் இறந்து இப்புவியில் மீண்டும் பிறவாமல் இருக்க என்முன் வந்து ஆட்கொள்வாயாக.

23. விரிந்த மூவுலகுள்ளும் இருப்பவளே! யாவற்றுக்கும் அப்பாலும் இருப்பவளே! என் உள்ளத்தில் முற்றிமுதிர்ந்த தேனே! அத்தேனுண்டு என்னால் களிக்கப்பெறும் களிப்பே! எனக்கு அருள் நிறைந்த கண்மணியான அபிராமியே! என துளத்தில் உன் வடிவையன்றிப் பிறிதொன்றை ஏற்க மாட்டேன்; உன் அடியார் கூட்டத்தை விட்டுப் பிரியேன். உன் சமயத்தை அன்றிப் பிறசமயத்தை விரும்பவும். மாட்டேன். (இது உறுதி).

24. மாணிக்க மணியே! அம் மணியின் செவ்வொளியே! ஒளி வீசும் மணிபதித்த ஆபரணமே! ஆபரணத்துக்கு அழகுதரும் அழகே! உன்னைச் சாராதவர்க்கு நோயே! சார்ந்தவரின் நோய் தீர்க்கும் மருந்தே! விண்ணோர்க்கு அமிர்தமே! (என் அபிராமியே!) உனது தாமரைத் தாள்களை வணங்கிய பின் வேறொருவரையும் வணங்கமாட்டேன்.

25, தலைமை பெற்ற அயன் அரி அரன் என்ற மூவர்க்கும் தாயே! இவ்வுலகத்தார்க்கு அபிராமி என்று பேர்படைத்த அமிழ் தமே! உன் அடியாரை வழிபட்டு, அவர்வழியே நடந்து எனது பிறப்பை ஒழிக்கும் பொருட்டு முன்னதாகவே நான் தவங்களை முயன்று மேற்கொண்டுள்ளேன். மேலும் உன்னை நான் மறக் காமல்வாழ்த்தி வருகிறேன். இனிமேல் எனக்குஎன்ன குறையுளது?

26. கடப்பமலரணிந்த கூந்தலையுடைய தெய்வமே! உன்னைத் துதிக்கும் அடியார்கள் யாரெனில், பதினான்குலகையும் படைத்தும் காத்தும் அழித்தும் இயக்குகிற திரிமூர்த்திகளாவர். அங்ஙன மிருக்க மணம்வீசும் உன் திருவடிகளுக்கு என்நாவில் பொருந்திய புன் மொழிகள் உன்னால் ஏற்றுக்கொள்ளப் பட்டதானது எனக்கே நகையைத் தருகிறது.

உடைத்தனை வஞ்சப் பிறவியை, உள்ளம் உருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை: நெஞ்சத் தழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை, சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே. 27

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே! நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும் சித்தி தரும்தெய்வம் ஆகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவமுயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே புரக்கும் புரத்தை அன்றே. 29

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய்; கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கினி நான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரைஏற் றுகைநின் திருவுளமே
ஒன்றே! பலஉருவே! அருவே! என் உமையவளே. 30

உமையும் உமையொரு பாகனும் ஏகஉருவில்வந்திங்
கெமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமையங்க ளும்இல்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயுமில்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக் கடலில் அகப்பட் டருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் பட இருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே. 32

இழைக்கும் வினைவழியே அடும்காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சல்என் பாய்அத்தர் சித்தமெல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே!
உழைக்கும் பொழுதுன்னையே 'அன்னையே' என்பன் ஓடிவந்தே. 33

27. சுந்தரி என்னும் அபிராமியே! நின் தாமரைத் தாள்கள் இரண்டினையும் தலையில் சூடும் அணியாக எனக்கே உரித்தாக்கினாய்; எனது மனமாசுகளை நின் திருவருளால் நீரால் கழுவி விட்டாய்; என் உளமுருகும்படி அன்பை உண்டாக்கினாய்; இவற்றால் எனது பொய்ப்பிறவியை உடைத்தெறிந்து விட்டாய். ஆகவேநின் திருவருட் செயலையான் என்னவென்று பாராட்டுவது?

28. களிநடம் புரியும் நின்கணவனுடன், சொல்லும்பொருளும் ஒன்றி நிற்பதுபோல் ஒன்றித்திருக்கின்ற நறுமணப் பூங்கொடியே! உன்மலரடிகளை இரவும் பகலும் விடாது வழிபடும் அடியார்க்கு தவவொழுக்கமும், சிவலோகப்பேறும் வாய்க்கும்.

29. என்னறிவில் பொருந்தி என்னைக்காக்கும் திரிபுரசுந்தரி தான் அட்டமாசித்திகளும், அச்சித்திகளைத்தரும் தெய்வமாகி விளங்கும் பராசக்தியும், அச்சத்தியோடு கூடிய சிவமும், தவம் செய்வோா பெறும் வீடுபேறும் வீடுபேற்றிற்கு வித்தாகிய பத்தியும், அவ்வித்தில் தோன்றிய சிவஞானமும் ஆகின்றாள்.

30. ஒரு வடிவானவளே! பல வடிவங்களாகவும் காட்சியளித்தவளே! புலப்படாத அருவாகவும் இருப்பவளே! என்தெய்வமான உமையே! முன்பே என்னைத்தடுத்தாட் கொண்டுள்ளாய்; அங்ஙனம் ஆட்கொண்டதை அல்ல என்று மறுத்தல் உனக்கு அழகாகுமா? நான் இனி எப்பிழை செய்தாலும் கடல் நடுவே விழுந்தாலும் கரையேற்றிக் காப்பது உன் கருத்தாக இருக்க வேண்டும்.

31. உமாதேவியும் அவளை இடப்பாகத்தில் கொண்ட சிவனும் அர்த்த நாரியாகத் தோன்றி அடியேனைத் தங்களிடம் அன்பு செலுத்த ஆட்கொண்டார்கள்; ஆகவே இனிமேல் ஆராய்தற்குச் சமயங்களும் இல்லை; என்னைப் பெறப்போகும் தாயொருத்தியும் இல்லை. மூங்கில் போன்ற தோளுடைய மாதர்மேல் வைத்த காதலும் முடிவுற்றது.

32. சிவனது இடப்பாகத்தில் இருக்கும்பெண்ணே! ஆசையாகிய கடலில் சிக்கி இரக்கமற்ற யமனின் பாசத்திலேயே கட்டுண்டு நரக வேதனைப்பட இருந்த என்னை, உனது திருவடித் தாமரைகளை என் தலைமேலே நீயாகவே வந்து வைத்து ஆட்கொண்ட உனதுபேரன்பை என்னவென்று சொல்லுவேன்.

33. சிவனது அறிவை நெகிழ்விக்கும் சாந்தணிந்த நகில்களை உடையயாமளையான இளையோளே! நான்வருந்தும் போதெல்லாம் உன்பால் ஓடிவந்து ''அன்னையே அன்னையே'' என்றுகூவி அழைப்பேன். செய்யும் பாவத்துக்கேற்பத் தண்டிக்க இருக்கும் யமன் என்னை நடுங்கும்படி அழைக்கும்போது நீயும் என்முன் ஓடிவந்து ''அஞ்சேல்'' என்று அபயம் அளிப்பாயாக.

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

திங்கட் பகவின் பணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்துமோ தரங்கக்கடலுள்
வெகட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே! 35

பொருளே! பொருள் முடிக்கும் போகமே! அரும்போகம் செய்யும்
மருளே! மருளில்வரும் தெருளே! என்மனத்து வஞ்சத்
திருளேதுமின்றி ஒளிவெளி யாகி இருக்கும் உன்றன்
அருளே தறிகின்றிலேன் அம்புயாதனத் தம்பிகையே! 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும், கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான் இடம் சேர்பவளே! 37

பவளக்கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக் குன்றன் அடித்தாமரைகள் உண்டு, அந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடை உண்டு, மேல்இவற்றின்
மூளுகைக் கென்குறை, நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கம்புதொகுத்தவில்லான் பங்கில் வாணுதலே!
39

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற் கண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்கெண்ணிய எண்ணம் அன்றோ முன்செய் புண்ணியமே.
40

34. அபிராமித்தாய் தன்னிடம் புகலடையும் அடியார்களுக்கு வானுலகத்தை அன்போடு கொடுத்துவிட்டு. தான் சென்று நான் முகனின் முகத்திலும் துளசிமாலேயும் கௌத்துவ மணியும் அணிந்த திருமாலின் மார்பிலும், சிவனது இடப்பாகத்திலும் அழகிய தாமரையிலும், ஒளிவீசும் சூரியனிலும், சந்திரனிலும் தங்கி இருப்பாள்.

35. அலேவீசும் பாற்கடலில் அரவணேயில் அறிதுயில் கொள்ளும் செம்பொருளே! (வைஷ்ணவியே) பிறைத்திங்களின் மணம் வீசும் உன் திருவடியை என் தலேயில் வலியவந்து வைக்கும் படி எனக்குத்தவம் கிடைத்தது என்ன வியப்பு! அளவற்ற தேவர்க்கும் இந்தத்தவம் கிடைக்குமோ? கிடைக்காது.

36. தாமரைத் தவிசில் எழுந்தருளிய அம்மையே! செல்வப் பொருளே! அப்பொருள் தரும் நுகர்ச்சியே! அந்த நுகர்ச்சி தரும் மயக்கமே! அம்மயக்கத்தின் முடிவில் ஏற்படும் தெளிவே! என் மனத்துள்ளே பொய்யிருள் சிறிதுமில்லாதபடி ஒளியாகவும் பரவெளியாகவும் இருக்கும் உனது திருவருள்தான் எப்படிப் பட்டதோ? அதனே நான் அறியேன்.

37. எண் திசைகளேயும் உடுக்கும் உடையாக உடைய சிவனது இடப்பாகத்தில் இருக்கும் அம்மையே! நீநின் கைகளில் ஏந்துவது கரும்பு வில்லும் மலரம்புகளுமாகும்: தாமரை போன்ற மார்பில் பூண்பது வெண்முத்து மாலேயாகும்: பாம்பின் படம் போன்ற இடுப்பில் அணிவது மணிமேலேயும் செம்பட்டுமாகும்.

38. பவளக்கொடி போன்ற சிவந்த வாயையும், புன்முறுவலோடு வெண்பல் வரிசைகளேயும் கருவிகளாகக் கொண்டு சிவபெருமானேத் தோள் குழையுமாறு பொருத துடி போன்ற இடையை மெலிவிக்கும் நகில்களே உடையவள் அபிராமி. நீங்கள் விண்ணுலகத்தை ஆளுதற்குவிரும்பினுல் அவளே வணங்குங்கள்.

39. முப்புரங்கள் அழிதற்கு அம்பையும் மேருவில்லேயும் ஏந்திய சிவனது இடப்பாகத்தில் இருக்கும் ஒளிமிக்க நெற்றியளே! அடியேனே ஆட்கொள்ள உன் திருவடித் தாமரைகள் உள்ளன; யமனிடமிருந்து தப்பிக்க உன்கடைவிழிகள் உள்ளன. இவ்விரண்டுக்கும் மேலாக வேருென்றில் நான் முயலுவதற்குக் காரணம் என்குறையேயாகும்; அது உன் குறையன்று.

40. ஒளிமிக்க நெற்றிக்கண்ணே உடையவளும், தேவர் யாவரும் வந்து வணங்கி வழிபடுவதற்கு நினேத்த எம்பெருமாட்டியும், அறிவிலாரது நெஞ்சில் காணமுடியாத கன்னியுமான அபிராமியைக் காண வேண்டும் என்ற அன்பு கொள்ளும்படி நினேத்த நினேப்பு, நான்முற்பிறவியில் செய்த புண்ணியமல்லவா?

புண்ணியம் செய்தனமே! மனமே புதுப் பூங்குவளைக்
கண்ணியும் தெய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணி இங்கே வந்து தன் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி இணைகொண் டிறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்அரவின்
படங்கொண்ட அல்குல் பணிமொழி வேதப் பரிபுரையே. 42

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணி இன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத் திருந்தவளே. 43

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்.
அவளே அவர்தமக் கன்னையும் ஆயினள், ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்,
துவளேன் இனிஒரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்து இச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன்றே பின்வெறுக்கை அன்றே. 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும்தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புதுநஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற் றானிடப் பாகம் கலந்தபொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே. 46

வாழும் படிஒன்று கண்டுகொண்டேன் மனத்தே ஒருவர்
வீழும் படியன்று, விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

41. மனமே! குவளைமலர் போன்ற கண்களையுடைய அபிராமியும் அவளது கணவரும் ஒருவிற் கூடி நம் பொருட்டு இங்கே நெருங்கிவந்து தமது அடியார் கூட்டத்தின் நடுவே நாமும் இருக்குமாறு செய்து நம்தலையின்மேல் தாமரைத்தாட்களைச் சூட்டுவதற்கு நாம் முற்பிறவியில் புண்ணியம் செய்துள்ளோம்.

42. இடமகன்று பூரித்து ஒத்து வலிதாகி மென்மையுமாகி முத்துமாலைகளை அணிந்த நகில்களான மலைகளைக் கொண்டு, சிவனதுநெஞ்சை நினைத்தவாறு ஆட்டிப்படைக்கும் குறிக்கோளும் அழகு நலமும் கொண்ட அபிராமியானவள், பாம்பின் படம்போலும் அடிவயிற்றையும் பகைவரைப் பணிக்கும் சொல்லையும் நான்மறைச் சிலம்புகளையும் உடையவளாவாள்.

43. மனத்தில் தீமைகளை நினைத்த முப்புரத்தரக்கர்களை அஞ்சுவிக்க வேண்டி வளைத்த மேருவில்லை ஏந்திய கைகளையும் தீயை ஒத்த செம்மேனியை உடைய சிவனது சரிபாதியான இடப் பாகத்தில் இருக்கும் அபிராமி, சிலம்பணிந்த சிற்றடிகளையும் பாசாங்குசங்களையும் உடையவள் ஐந்து மலரம்புகளையுடையவள்; இன்சொற் பேசும் திரிபுரசுந்தரி ஆவாள்; சிந்தூரம் போன்ற செம்மேனியள் ஆவாள்.

44. தவஞ்செய்த உமாதேவியான இவள் சிவனுர்க்கு இல்லத் துணைவியாவாள்; மற்றும் அவளே அச்சிவனுர்க்குத் தத்துவவரிசைப் படிதாயும் ஆவாள். ஆகவே அவ் அபிராமியே தெய்வங்களுக்கெல்லாம் மேலான தேவியும் ஆவாள் இனிமேல் வேருெரு தெய்வம் இருப்பதாக எண்ணி மெய்வருந்தித் தொண்டு செய்து வாட மாட்டேன்.

45. அபிராமியே! உனக்குத் தொண்டு செய்யாமலும், உன் திருவடியை வணங்காமலும் மனம் துணிந்து தன் விருப்பப்படி நடந்து கொண்ட அடியார்கள் முற்காலத்தில் உண்டோ? இல்லையோ? (உண்டு) அவ்வடியார்களின் இயல்புபோல நானும் செய்தால் அது வஞ்சகமோ? அல்லது நற்றவமோ? (நான் அறியேன்) நான் முரணுனவற்றைச் செய்தாலும் நீ பொறுப்பது அறமாகும். அவ்வாறின்றி வெறுப்பது அறமன்று.

46. நஞ்சைப் பருகிக் கறுத்துப்போன கண்டத்தையுடைய சிவனின் இடப்பாகத்தில் இணைந்த அபிராமியே! தம்அடியவர்கள் ஒரோவழி வெறுக்கத்தக்கவற்றைச் செய்தாலும் பெரியோர்கள் அடியாரை பொறுப்பது என்பது புதுவழக்கமன்று, அங்ஙனம் நீ என்னைப் பொறுக்காமல் அதற்குமாருக ஒறுத்தாலும் கூட நான் உன்னை வாழ்த்திக் கொண்டே இருப்பேன்.

47. நான் கடைத்தேறும் வண்ணம் ஒருபரம்பொருளைக்கண்டு கொண்டேன். அப்பரம்பொருள் மனத்தால் நினைந்தறியும் தன்மையுமன்று; வாயால் சொல்லும் தன்மையுமன்று; எழ்கடலுக்கும் ஏழ்நிலத்துக்கும் எட்டு மலைக்கும் எட்டாதபடி அப்பால் நின்று இரவையும் பகலையும் உண்டாக்கும் சூரிய சந்திரர்களான சுடர்கட்கு நடுவே ஒளிவிடுகின்றது.

டரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப் போதிருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

குரம்பை அடுத்துக் குடிப்புக்க ஆவி வெங்கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகுமப் போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சலென்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே! 49

நாயகி நான்முகி நாராயணி கைநளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்று
ஆய கியாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50

அரணம் பொருளென் றருளொன் றிலாத அசுரர் தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் என்கின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே. 51

வையம் துரகம் மதகரிமா மகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யும் தவமுடையார்க்குள வாகிய சின்னங்களே. 52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
கென்னம்பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப்பார்க்கு இதுபோலும் தவமில்லையே. 53

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவி ரேல்நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

48. பிறையை அணிந்த சடைமுடியையுடைய சிவபெருமானின் தோளாகிய குன்றில் படர்கின்ற நறுமணப் பசுங்கொடியாகிய அபிராமியை, ஒருவர் தன் நெஞ்சிலே ஊன்றி இடையூறகற்றி ஒரு நொடிப்பொழுதளவு தியானிப்பாராறைல், அவர் குடரும் கொழுப்பும் இரத்தமும் பொருந்திய உடம்புக்குள் இனிமேல் நுழைவாரோ? நுழையார்.

49. யாழ் நரம்பில் பொருந்திய ஏழிசை வடிவான இறைவியே! (அபிராமியே!) உடம்பாகிய குடிசையை அடைந்து அதில் குடி புகுந்த என் உயிர் எமனுக்குக் குறித்துச் சொன்ன ஆயுள் வரம்பை அடைந்து தடுமாறும்போது, வளையல் அணிந்த நின் வலக்கையால் அபயம் கொடுத்து அஞ்சேல் என்று அருள்வாயாக.

50. தலைவியே! நான்முகன் சக்தியே! நாராயணன் சக்தியே! கைத்தாமரையில் ஐந்து மலரம்புகளை உடையவளே! சம்புவின் சக்தியே! இன்பம் செய்பவளே! யாமளாதேவியே! நச்சுப்பாம்பு களாகிய மாலையை யணிந்தவளே! வராகர் சக்தியே! மதங்கர் குலப் பெண்ணே! என்று சொல்லப்படுகிற பல்வேறு புகழையுடைய அபிராமியின் திருவடிகளே நமக்குப் புகலிடம்.

51. முப்புரங்களையே அழியாப்பொருள் என்று கருதிய இரக்க மென்பதே இல்லாத அரக்கர்களின் மாறுபாடு கெடும்படி கோபித்தவன் சிவன். அச்சிவனும் திருமாலும் 'அடைக்கலம் அடைக்கலம்' என்று வேண்டும்படி நின்றவள் அபிராமி அவளுடைய அடியார்கள் இவ்வுலகில் இனி இறப்பும் பிறப்புமாகிய இரண்டையும் பெறமாட்டார்கள்.

52. பிறைசூடிய பெம்மானின் இல்லாளான அபிராமியின் திருவடித் தாமரைகளுக்கு முற்பிறப்பில் அன்பு செய்தவர்களுக்கு இப்பிறப்பில் உண்டான அடையாளங்கள், அவர் பெற்றிருக்கும் தேரும் குதிரையும் யானையும் மணிமுடியும் பல்லக்கும் பகைவர் தரும் நிறைப் பொன்னும் விலைமிக்க முத்துமாலைகளும் ஆகும்.

53. அபிராமியம்மை தனது சிற்றிடையில் உடுத்த செம் பட்டாடையையும், அவளது மிகப்பருத்த மார்பகங்களையும் அவளணிந்த முத்துமாலையையும், அவளுடைய பிச்சி மலரணிந்த கருங்கூந்தலையும், அவளுடைய முக்கண்களையும் நினைவில் வைத்துத் தியானிப்பவர்களுக்கு இதை ஒத்த தவம் வேறேதும் இல்லை.

54. புலவர்காள்! ஒருவரிடம் சென்று இல்லாத பண்புகளை இருப்பதாகப் புனைந்து கூறித் தன்னிலை தாழ்ந்து நிற்காமையை நீங்கள் விரும்பினுல், எப்போதும் உயர்தவத்தைச் செய்யா திருப்பதையே கற்ற கீழ்மக்களிடம் ஒருபோதும் செல்லாதபடி அனைத்தும் தன்பால் வைத்துள்ள திரிபுரசுந்தரியின் திருவடிகளை இடைவிடாமல் நினையுங்கள்.

மின்னு யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்றது
அன்னுள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னுய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னு தொழியினும் உன்னினும் வேண்டுவ
தொன்றில்லையே. 55

ஒன்ருய் அரும்பிப் பலவாய் விரிந்து இவவுலகெங்குமாய்
நின்ருள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன்
நெஞ்சினுள்ளே
பொன்ருது நின்று புரிகின்ற வா! இப்பொருளறிவார்
அன்ருல் இலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56
ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறஞ்செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப்பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோஉன்றன்
மெய்யருளே. 57

அருணம் புயத்தும் என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையல்நல்லாள் தகைசேர் நயனக்
கருணம் புயமும் வதனம் புயமும் கராம்புயமும்
சரணம் புயமும் அல்லால் கண்டிலேன்ஒரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லதென்று உன்தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்கலராக நின்ருய் அறியார் எனினும்
பஞ்சஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே. 59

பாலினும் சொல்லினியாய் பனிமா மலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின்ருேன் கொன்றை
வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடமொரு
நாலினும் சால நன்ருே அடியேன் முடைநாய்த்தலையே. 60

நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ள
வண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறுபெற்றேன்
தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத் தங்கைச்சியே. 61

55. மன்னர்காள்! அபிராமி ஆயிரம் மின்னல்கள் ஒன்றுகூடி ஒளிர்வது போன்றவள்; அடியார்களை அகமகிழ்விக்கும் பேரின்பச் செல்வி; நான்மறையின் முதலும் நடுவும் முடிவுமாகிய முதல்வி அப்படிப்பட்டவளை நீங்கள் நினைத்தாலும் நினையாது போனாலும் நான் உங்களிடம் வேண்டுவது யாதுமில்லை. (அவளிடமே வேண்டுவேன்.)

56. ஒரே சக்தியாய் அரும்பு விட்டுப் பற்பல சக்திகளாய் மலர்ந்து உலகெங்கும் மணமாய் வியாபித்திருப்பவள் அபிராமி. அவளே எப்பொருளையும் கடந்தும் நிற்பவள் ஆயினும் அவள் என் மனத்தே நீங்காமல் நின்று அருள் புரிதல் பெருவியப்பே. இவ்வுண்மையை அறித்தவர் ஆலிலையில் உறங்கிய திருமாலும் சிவனுமே ஆவர்.

57. சிவனார் அளந்து கொடுத்த இருநாழிநெல்லைக் கொண்டு உலகனைத்தையும் உய்யும்படி முப்பத்திரண்டறங்களையும் செய்கின்ற உன்னை இதுகாறும் போற்றி வந்தும், இப்போது சரபோஜி என்னும் ஒருவனிடம் சிறந்த தமிழ்ப்பாமாலையோடு சென்று என்னைப் பொய்யும் மெய்யும் கூறும்படி வைத்து விட்டாயே. இதுதானா உனது திருவருள்?

58. செந்தாமரையிலும் எனது உளத்தாமரையிலும் வீற்றி ருக்கும் பருவகாலத் தாமரையரும்பு போன்ற நகில்களையுடைய பெண்ணின் நல்லாளே! உனது அழகிய அருள்விழித் தாமரையும் முகத்தாமரையும் கைத்தாமரையும் திருவடித் தாமரையுமேயன்றி வேறெதனையும் புகலிடமாக அறியேன்:

59. நீண்டவில்லைக் கரும்பாகவும், அஞ்சு அம்புகளை மலராகவும் கொண்டு நின்றவளே! பஞ்சை மிதிக்கவும் அஞ்சுகின்ற மெல்லிய அடிகளையுடைய தாய்மார்கள் தாம்பெற்ற பிள்ளைகளைப் பேதைய ராயினும் அடிக்கமாட்டார்கள் (அணைப்பார்கள்). நான் உன் தவ நெறியான இதுவன்றி வேறுபுகலிடம் இல்லை என்றறிந்தும் உன் தவநெறியில் மனமொன்றிப் பழக நினைத்திலேன். (அதுபற்றி என்னை நீ அடிக்காமல் அணைக்க வேண்டும்.)

60. பாலைவிட இனிய சொல்லையுடையவளே! திருமாலும் மற்ற தேவர்களும் வணங்கும்படி நின்ற சிவனது நீண்டசடை முடியைக் காட்டிலும், நான்மறைகள் பாடுகின்ற பிரணவ பீடங்கள் நான்கைக் காட்டிலும் நின்மலரடிகளைச் சூட்டுதற்கு அடியேனது முடைநாற்ற முள்ள இழிந்த தலை உனக்கு மிகவும் நல்லதாயிற்றோ?

61. அனைத்துயிர்க்கும் தாயே! மலையரசனுக்கு மகளே! திருமாலுக்குத் தங்கையே! அடியேனையும் ஒரு பொருட்டாக எண்ணி விரும்பி வந்து எதனையும் சிந்திக்காமல் நீயாகவே ஆண்டு கொண்டாய்; மேலும் உன்னை உள்ளபடியே கீழ்மையேன் அறிந்து கொள்ளும் அறிவைத் தந்தாய். நான் எத்தகைய பேற்றைப் பெற்றுள்ளேன்!

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும்என் சிந்தையதே. 62

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்று கொண்டாடிய வீணருக்கே. 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்கன்பு பூண்டுகொண்டேன் நின்
புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநிலமும் திசைநான்கும் ககனமுமே. 64

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன்அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாய தன்றோ வல்லி! நீ செய்த வல்லபமே. 65

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன்நின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம்செய் துதொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும்மனத்தில் வையாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழலா நிற்பர் பாரெங்குமே. 6.

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே. 68

62. பொன்மேருவில்லை ஏந்தி, அரக்கரின் முப்புரத்தை அழித்து யானைத்தோலைப் போர்த்திக் கொண்ட பெருவீரன் சிவன்; அப்படிப் பட்ட வீரனது திருமேனியில் வடுவுண்டாகும் படி நகிலாகிய குரும் பையால் அடையாளமிட்ட தலைவியே! உனது தாமரைக் கைகளில் ஏந்திய கரும்புவில்லும் மலரம்புகளும் எப்போதும் என் நினைவில் உள்ளன.

63. ஆறுசமயத்துக்கும் அபிராமியான இவளே தலைவியாக இருப்பதை அறிந்து வைத்தும் பிறசமயமும் உண்டு என்று அதனைப் பாராட்டித் திரியும் வீணர்களுக்கு மனம் தெளியும்படி சில காரணங் காட்டிச் செல்லுங்கதிக்குக் கூறும் செம்பொருள்கள் யாவும் மலைப் பாறையில் அடித்த முளைக்குச்சியைப் போல சிதறிப் போகும்.

64. அபிராமியே! உன்னிடம் அன்பு வைத்துவிட்டேன் அதனல் பயனின்றிப் பலி ஏற்கும் சிறுதெய்வங்களிடம் சென்று பேரன்பு செய்ய மாட்டேன். மேலும் உன்புகழையன்றிப் பிறர் புகழை விரும்ப மாட்டேன் பரந்த பூமியிலும் நான்கு திசைகளிலும் அண்டவெளி யிலும் உன் திருமேனி ஒளியையன்றி வேறெதனையும் ஒருபோதும் காணமாட்டேன்.

65. அபிராமவல்லியே! அண்டவெளியில் உள்ளவர்களும் விண்ணவரும் மண்ணவரும் காணும்படி மன்மதனின் உடலை எரித்த தவயோகி சிவன். அப்படிப்பட்ட தவயோகிக்கும்; தோள்கள் பன்னிரண்டு முகங்கள் ஆறு என்று புகழும்படி பேரறிவுள்ள மகனை உண்டாக்கியது நீ செய்த சாமர்த்தியம். அல்லவா?

66. பொன்மேரு வில்லையுடைய சிவபெருமானேடு ஒக்க வீற்றிருப்பவளே! நான் ஒரு சாமர்த்தியமும் அறியாச் சிறுவன் ஆயினும் உன் மலரடித் தளிர்களை அன்றி வேறொரு பற்றுக்கோடும் இல்லேன், தீவினையேனுகிய நான் தொடுத்த இச்சொன்மாலை ஒரோ வழிப் பொருளற்றதாய் விடினும் இடைஇடையே தொடுத்த உன் திருநாமங்கள் தோத்திரமாகுமே.

67. அபிராமியே! உன்னை வாயால் துதிசெய்து, மெய்யால் வணங்கி, மின்னல் போலும் உனது தோற்றத்தை மனத்தில் ஒரு நொடிப்பொழுதாவது நிலை நிறுத்தாதவர்கள், தமது வள்ளன்மையும் குலமும் கோத்திரமும் கல்வியும் குணமும் குறைந்து போய் உலகெங்கும் நாள்தோறும் வீடுகள்தோறும் ஓடேந்திப் பிச்சைக்காக அலைவார்கள்.

68. நிலம் நீர் தீ காற்று வானம் என்பவற்றிலும், இவற்றுக்கு மூலமான நாற்றம் சுவை ஒளி ஊற்றுணர்வு ஓசை என்பவற்றிலும் பிரிவறக் கலந்திருக்கும் தலைவியே! சிவகாமசுந்தரியே; உனது சிற்றடிக்கண் மனம்பொருந்தும் தவமுடையவர்கள் அடையப் பெருத செல்வம் எதுவும் இல்லை.

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர் வறியா
மனம்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே, 69

கண்களிக் கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமும் ஆகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே. 70

அழகுக் கொருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே! இரங்கேல் உனக்கென் குறையே
71

என்குறை தீரநின்றேத்துகின்றேன் இனியான்பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறைகாண் இருநீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங்கோன் சடைமேல்வைத்த தாமரையே, 72

தாமம் கடம்பு படைபஞ்சபாணம், தனுக்கரும்பு,
யாமம் வயிரவர் ஏத்தும்பொழுது எமக்கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளிசெம்மை. அம்மை
நாமம் திரிபுரை, ஒன்றோடிரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்
பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே, 75

69. மேகம் போன்ற கூந்தலையுடையாளான அபிராமியின் கடைக்கண்கள், அவளுடைய மெய்யன்பர்களுக்கு அவரவர் விரும்பிய வாறு செல்வத்தைத் தரும். கல்வியைத் தரும். ஒரு போதும் தளராத மனத்தைத் தரும். தெய்வீக அழகைத் தரும். மனத்தில் வஞ்சனை யற்ற சுற்றத்தாரைத் தரும்; மேலும் நல்லவற்றை எல்லாம் தரும்.

70. பண்களை மிஞ்சிய குரலைப்போன்ற வீணையும் கையும் மார்பகங்களும் மண்ணவர்கள் கண்டுகளிக்கும் பச்சைநிறமும் உடையவளாகிக் கடம்பவனமாகிய மதுரையில் பாணர்குலப் பெண்களில் ஒருத்தியாகப்பிறந்த எம்பிராட்டியான மீனாட்சியின் பேரழகினை அகக்கண் உவக்குமாறு அறிந்து கொண்டேன்.

71. (சரபோஜியின் ஆணைகேட்டுத்) தளர்வுற்றுநின்ற மனமே! நீ வருந்தாதே. தன் அழகுக்கு வேறெவரும் ஒப்பாகாதவளும். வேதங்களின்மேல் அடிவைத்துப் பழகியதால் சிவந்த திருவடித் தாமரைகளை உடையவளும், பிறைமுடி இளமை பச்சைநிறம் என்பவற்றை உடைய கொம்பு போன்றவளும் ஆகிய அபிராமி நம்பக்கம் இருக்கும்போது உனக்கு என்னகுறை வந்துவிட்டது?

72. வானத்து மின்னலுக்கு ஒரு குறைவு செய்து அதனினும் மெலிந்த இடையே உடைய மெல்லியலாளே! ஊடலால் வந்த தன் மனக்குறை தீரும்படிச் சிவனர் வணங்கும்போது அவரது சடைமுடி மீது வைத்த தாமரைத் தாள்களை நானும் என் குறை தீரும்படித் துதிக்கின்றேன். இனிமேல் நான் பிறந்தால் அது உன் குறையே யன்றி வேறு எவருடைய குறையாகும்?

73. என் அபிராமியம்மை தனக்காக வைத்துக்கொண்ட பெயரோ திரிபுர சுந்தரி; கண்களோ மூன்று; கைகளோ நான்கு; நிறமோ சிவப்பு; மாலையோ கடப்பமாலை; ஆயுதமோ ஐந்து மலரம்புகள்; வில்லோ கரும்பு; பைரவரால் வணங்கப்படும் நேரமோ அர்த்தயாமம், ஆனல் அடியேனுக்கென்று வைத்துள்ள பாதுகாப்பான இடம் திருவடிகள்.

74. மூன்று கண்களையுடைய சிவனும் வேதங்களும் திருமாலும் நான்முகனும் துதிக்கின்ற அபிராமவல்லியின் திருவடிகளையே பெறத்தக்க பயன் என்று உட்கொண்டவர்கள் பொற்பாயல் பொருந்திய பொன்மயமான கற்பகச்சோலையில் தம் முன்னே அரம்பை முதலிய பெண்கள் ஆடவும் பாடவும் இந்திரராகித் தங்கி இருப்பர்.

75, பெருமலைகளையும் உவர்க்கடலையும் பதினன்கு உலகங் களையும் தோற்றுவித்த கொப்பூழும், தேன்துளிக்கும் மலர்க்குழலும் உடையாளான அபிராமியின் திருமேனிக் கோலத்தைத் தியானிப் பவர்கள், கற்பகமர நிழலில் இந்திரராகத் தங்கி இருப்பர்; மேலும் தம்மைப் பெறத் தாயரில்லாமையால் பூமியில் தொடர்கின்ற பிறப்பைப் பொலிவிழக்கச் செய்வர்.

குறித்தேன் மனத்தில் நின் கோலமெல்லாம் நின்
குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான் ஒரு கூற்றை
மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே. 76

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டிகாளி ஒளிரும்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறைசேர் திருநாமங்கள் செப்புவரே. 77

செப்பும் கனகக் கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியும் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கே வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டெமக்கு அவ்வழிகிடக்கப்
பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.
79

கூட்டியவா என்னைத் தன்னடியாரில் கொடியவினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா, தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும் மனமும்களிக்கின்றவா,
ஆட்டியவா நடம், ஆடகத் தாமரை ஆரணங்கே! 80

அணங்கே! அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆசையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்திலேன்நெஞ்சில்வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன், அறிவொன்றிலேன் என்கண் நீ வைத்த
பேரளியே 81

அளியார் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர் திருமேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ஙனே மறப்பேன் நின்விரகினையே.84

76. வண்டுகள் குடைந்து தேனைச் சிந்துவிக்கின்றகொன்றை மலரணிந்த சிவனாரின் திருமேனியில் இடது பங்கைக் கவர்ந்து அதிலே குடியேறுகின்ற-ஐந்துமலரம்புகளையுடைய-பைரவியே! உன் திருவுளக்குறிப்பை அறிந்து உன் திருமேனிக்கோலம் முழுவதையும் என்மனத்தில் எழுதி வைத்தேன். அதனால் எமன் வரும் வழியை அடைத்து விட்டேன்.

77. பயிரவி, பஞ்சமி பாசாங்குசை,பஞ்சபாணி, வஞ்சகர்களின் உயிரைப் பலியாக உண்ணும் சண்டி, காளி, ஒளிவீசும் கலாவயிரவி, மண்டலி, மாலினி, சூலி, வராகி என்பனவாக நான்மறைகளில் பொருந்திய குற்றமற்ற உனது திருநாமங்களை அடியார்கள் இடைவிடாது சொல்லிக் கொண்டே இருப்பர்.

78. தந்தச் சிமிழையும் பொற்குடத்தையும் போன்ற நகில்களின் மேல் களபச் சாந்தைப் பூசுகின்ற அபிராமவல்லியே! உனது முத்துக் கொப்பையும், வைரத் தோட்டையும், கடைக்கண்ணையும், பவளவாயையும், நிலாப் பற்களையும் எனது இரு விழிகளிலும் எழுதி வைத்துள்ளேன்.

79. (என்னைக்காக்க) அபிராம வல்லிக்கு விழிகளிலே அருளும் உண்டு, வேதங்கள் சொன்னபடி அவளை வழிபட எனக்கு நெஞ்சும் உண்டு. வேதங்கள் சொன்ன அந்தவழி இருக்கும்போது, பழியிலே தடுமாறிப், பாவங்களையே செய்து பாழ்பட்ட நரகக்குழியிலே வீழவிருக்கும் கயவர்களோடு இனி என்ன உறவு வேண்டிக் கிடக்கிறது?

80. பொற்றாமரையில் பொலியும் தெய்வமே! என்னை உன் அடியாரோடு கூட்டுவித்ததும் ஓர் வியப்பே. என்வினைகளை ஓட்டுவித்ததும் ஓர் வியப்பே. என்னிடம் நீ விரைந்து வந்ததும் ஓர் வியப்பே. உன்னை உள்ளபடி எனக்குக்காட்டியதும் ஓர் வியப்பே. அக்காட்சியைக் கண்ட என்கண்ணும் மனமும் மகிழ்கின்றதும் ஓர் வியப்பே. இவ்வாறெல்லாம் என்னைப் பாவையாட்டம் ஆட்டியதும் ஓர் வியப்பே.

81. அபிராமித் தெய்வமே! பிறதெய்வங்கள் உனது பரிவார தேவதைகள். ஆகையால் அவருள் ஒருவரையும் பணியேன்; மனத்தால் வாழ்த்தவுமாட்டேன். வஞ்சகர்களோடு சேரேன். ''என் உடமைகள் யாவும் உன் உடைமைகள்'' என்று உன்னிடம் அர்ப்பணித்திருப்பவர் சிலரேயாயினும் அவர் யாவரோடும் மனம் மாறுபடேன். யான் அறிவிற் சிறியேனாயினும் என்பால் நீ வைத்தது பேரருள் அன்றோ!

82. வண்டுமொய்க்கும் தாமரையில் மேவிய அபிராமித் தெய்வமே! அண்டமெல்லாம் உன் ஒளி பரவுமாறு நின்ற உனது ஒளிமேனியைத் தியானிக்கும்தோறும், எனது மனம் முதலிய உட்கரணங்கள் களிப்புற்றுப் பூரித்து எல்லைகடந்து பரவெளியாக மாறி விட்டாலும், அங்ஙனம் செய்த உன்சாமர்த்தியத்தை நான் எப்படி மறக்கமுடியும்?

விரவும் புதுமலரிட்டு நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராதவமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே. 83

உடையாளை ஒல்குசெம் பட்டுடை யாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத்தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கென்னை இனிப்
படையாளை உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே 84

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல் முத்து மாலையுமே. 85

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்தம் என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒரு பாகங்கொண் டாளும் பராபரையே. 87

பரமென் றுனை அடைந்தேன் தமியேனும் உன் பத்தருக்குள்
தரமன் றிவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே. 88

சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கம் தரவந்து உடம்போ டுயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென் முன்னேவரல்வேண்டும் வருந்தியுமே
89

83. அபிராமியே! பல்வேறு புதுமலர்களைத் தூவி உனது திருவடித் தாமரைகளை இரவும் பகலும் இடைவிடாது வணங்க வல்லவர்கள், தேவர்களால் வணங்கப்பெறும் இந்திர பதவியையும் அயிராவத யானையையும் ஆகாயகங்கையையும் வலிய வச்சிராயு தத்தையும் கற்பக்காட்டையும் உடையவராவர்.

84. (நம்மவர்களே!) யாவற்றையும் தனதுடைமையாக உடையவளும், செம்பட்டாடையை உடையவளும், பிறையணிந்த செஞ்சடை உடையவளும், வஞ்சகரின் மனத்தில் சேராதவளும், நுண்ணிய நூல் போன்ற இடையை உடையவளும் எங்கள் சிவனுரது இடப்பாகத்தவளும், இனிமேல் என்னைப் பிறவாமல் செய்தவளும ஆகிய அபிராமியை-உங்களையும் பிறவாமல் செய்யும்படி-தரிசித்துக் கொண்டிருங்கள்.

85. என் துன்பமெல்லாம் தீர்க்கின்ற திரிபுரசுந்தரியின் திருமேனியும், பாசாங்குசமும், வண்டொலிக்கும் ஐந்து மலரம்பு களும், கரும்புவில்லும், சிறிய இடுப்பும், கச்சணிந்து குங்குமக் குழம்பு பூசிய நகில்களும், அந்த நகில்களின் மேல் அணிந்த முத்துமாலையும் மட்டுமே நான் பார்க்கும் திசைதோறும் தோன்று கின்றன.

86. பாலும் தேனும் பாகும் போன்ற இனியமென்சொற்களைப் பேசும் அபிராமியே! திருமாலும் நான்முகனும் வேதங்களும் தேவர் களும் தேடும்படி அரிதாக நின்ற உனது திருவடிகளையும் வளைக்கை களையும் உடையவளாகி வெளிப்பட்டுக் காட்சி தருக. அதாவது கொடிய எமன் முக்கிளையான வேலை என்மேல் விடும் போது காட்சி தருக.

87. நெற்றிக்கண்ணுல் மன்மதனை அழித்த சிவனுரது அழியாத தவவிரதத்தை உலகமெலாம் பழிக்கும்படி ஒழிவித்து, அவரது இடப்பாகத்தைப் பெற்று ஆளுகின்ற பெரும்பொருளே! பேச்சுக்கும் நினைப்புக்ும் எட்டாத உனது திருக்கோலம் எனது (செயலுக்குரிய) கண்ணுக்கும் வழிபாட்டிற்கும் எளிதில் காட்சி தருகிறது. (இது வியப்பன்றே!)

88. பகைவரது முப்புரங்களை முன்பு அழிக்க மேருவில்லை வளைத்ததும், பூவிலிருக்கும் நான்முகனின் தலை ஒன்றைக் கொய்ததும் ஆகிய திருக்கரத்தையுடைய சிவனின் இடப்பாகத்தில் சிறப்புற்றி ருப்பவளே! ''நீயே புகலிடம்'' என்று நான் உனை அடைந்தேன். என்னை உனது அடியாரினத்துள் சேர்க்க ''இவன் தகுதியற்றவன்'' என்று தள்ளிவிடக் கூடாது.

89. சிறந்த தாமரைத் திருவான அபிராமியே! உன் திருவடியில் தலைவைத்து வணங்கிலுல் அதற்காக வீடுபேறு தரும் நீயும் நின் கணவரும், எனக்குத் துரியாதீதத்தில் அறிதுயிலைத் தந்து பிறகு என் உடம்போடு உயிர்த் தொடர்பு நீங்கி அறிவு மறக்கும் அந்திம காலத்தில் என் முன்னே வருந்தியேனும் கட்டாயம் வரல் வேண்டும்.

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்து
இருந்தாள் பழைய இருப்பிட மாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே. 90

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடூரும் பதம்தருமே. 91

பதத்தே உருகிநின் பாதத்திலே மனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண்டாய் இனி யானொருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர் போனவழியும் செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.
92

நகையே இஃது இந்தஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பதும் நாம்
மிகையே இவள்தன் தகைமையைநாடி விரும்புவதே. 93

விரும்பித் தொழும்அடியார் விழிநீர்மல்கி மெய்ப்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறி முன்சொன்ன எல்லாம்
தரும்பித்த ராவர்என்றால் அபிராமி சமயம்நன்றே. 94

நன்றே வருகினும் தீதே விளைகினும நானறிவது
ஒன்றேயும் இல்லை உனக்கேபரம் எனக்குள்ள எல்லாம்
அன்றே உனதென் றளித்துவிட்டேன் அழியாதகுணக்
குன்றே! அருட்கடலே! இமவான்பெற்ற கோமளமே! 95

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம்இல்லாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே. 96

90. விண்ணுலகில் வாழும் தேவர்க்கும் பாற்கடலில் கிடைத்த அமிர்தத்தை விருந்தாக வழங்கிய மெல்லியல்புடைய அபிராமி யானவள். பிறவிக்கடலில் நான் வருந்தாதபடி என் உளத்தாமரையில் வந்து குடிபுகுந்து தனது பழைய இருப்பிடமாகவே எண்ணி வீற்றிருக்கிருள். ஆகவே இனிமேல் எனக்குக் கிடைக்காதது ஒன்று மில்லை.

91. மெலிந்த சிறிய இடுப்பு மின்னலை ஒப்பவளும், சிவனுர் தழுவிய நகில்களின் நிறம் பொன்னை ஒப்பவளும் ஆகிய அபிராமியை வேதங்கள் புகழ்ந்து சொன்னபடி வணங்கும் அடியார்களை வணங்கு கின்ற சிற்றடியார்களுக்கும் பல இசைக் கருவிகள் ஒலிக்க வெள்ளை யானைமீது ஏறிச் செல்லும் இந்திர பதவியை அவள் தருவாள்.

92. முதல்வர்களான மும்மூர்த்திகளும் மற்றை யாவரும் வணங்கும்-புன்முறுவலையுடைய அபிராமியே! என் மனம் பக்குவ நிலையில் உருகி உன் திருவடியில் பொருந்திஉன் விருப்பப்படியே நடக்க என்னை ஆட்கொண்டாய் ஆகவே இனிமேல் நான் மற்ருெருவர் சமயத்தில் அறிவு கலங்கேன். அவர் போன நெறியிலும் செல்ல மாட்டேன்.

93. 'இந்த உலகமெல்லாம் பெற்ற தலைவிக்கு நகில்கள் அரும்பளவே; கண்கள் மான் அளவே' என்று கூறும் இது நகைப் புக்கு இடமாகும். அவளுக்கு இறப்பு இல்லை. அது போலவே பிறப்பும் இல்லை எனவே அவளை மலையரசனின் மகள் என்று நாம் கூறுவதும் பொய்யே. இவள் இயல்புகளை ஆராய்ந்து பிறகு அன்பு செய்வோம் என்பது நமக்கு அப்பாறபட்டதேயாகும்.

94. அபிராமியை விரும்பி வணங்கும் அடியார்கள் கண்ணீர் மல்கி, மெய்தான் அரும்பி பொங்கி வழியும் இன்பமயமாகித் தற்போதம் கெட்டு, மதுவுண்ட வண்டுபோல் களிப்புற்றுச் சொல் தடுமாறி முன்னோர்களால் சொல்லப்பட்டபடி உடல் பொருள் ஆவி யாவும் அர்ப்பணிக்கின்ற பித்தராகி விடுகிருர்கள் என்ருல் அபிராமியின் சமயம் நன்றேயாகும். (இதில் ஐயமென்ன?)

95. அழிவிலாத குணக்குன்றே! அருட்கடலே! மலையரசன் பெற்ற இளையோளே! எனது உடல் பொருள் ஆவி யாவும் நீ ஆட்கொண்டபோதே உனதாக அர்ப்பணித்து விட்டேன். ஆகவே நல்லது வந்தாலும் கெட்டது வந்தாலும் அவைபற்றி நான் உணர்வது ஒன்றுமில்லை. எல்லாம் உனக்குத்தான் பொறுப்பு.

96. இளங்கொடி போன்றவளும், அகவிதழையுடைய தாமரையாம் திருக்கோயிலில் இருக்கும் யாமளாதேவியும், மாசற்ற வளும், எழுத ஒண்ணுத பச்சை நிறமேனியையுடைய சகலகலா மயிலும் ஆகிய அபிராமியைத் தம்மால் முடிந்தமட்டும் வழிபடுகின்ற வர்கள் ஏழுலகிற்கும் அரசராவர்.

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர் தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

தைவந்து நின்அடித் தாமரை சூடிய சங்கரர்க்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல்லால் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகலறியா மடப் பூங்குயிலே! 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பிற் கமலத்தின்மீ தன்னமாம்
கயிலா யருக்கன்று இமவான் அளித்த கனங்குழையே. 99

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கருப்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப்பொருகண்ணும் நெஞ்சில்எப்போதும் உதிக்கின்றவே 100

நூற் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங் குசமும் கருப்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே

97. சூரியனும், சந்திரனும், அக்கினியும் குபேரனும், இந்திரனும் நான்முகனும், சிவனும், திருமாலும், அகத்தியனும், கோபித்துப் போரிடுகிற வேற்படையையுடைய முருகனும், விநாயகனும், மன்மதனும் மற்றும் இவர் முதலாகப் புண்ணிய சாதனை செய்தவர்களும் ஆகிய கணக்கற்றோர் அபிராமியையே வழிபடுகின்றனர்.

98. உண்மை நெஞ்சிலன்றி வஞ்சகரின் பொய்ப்பட்ட நெஞ்சில் ஒருபோதும் நுழையாத பூங்குயிலான அபிராமியே! (உவது ஊடல் தீருமாறு) உன் திருவடித் தாமரைகளைக் கையால் வருடித் தலையில் சூடிய சிவபெருமானுக்கு (வருடும்போது) கையில் இருந்த தீயும் (சூடும்போது) •தலையிலிருந்த கங்கையும் எங்கே போய் ஒளித்தன?

99. முன்பொரு நாள் சிவனுக்கு மலையரசன் மணம் செய்வித்த கணங்குழையணிந்த-அபிராமி, கடம்பவனத்திலே குயில்போல் மீனாட்சியாக இருப்பாள்; இமயமலையிலே மயில்போல் பார்வதியாக இருப்பாள்; ஆகாயத்திலே உதிக்கின்ற செங்கதிராக இருப்பாள்; தாமரையிலே அன்னம் போல் சரஸ்வதியாக இருப்பாள்.

100. சிவனுடைய மார்புகுழையத் தழுவியதும், அதனால் கொன்றை மாலையின் மணம் வீசுவதும் ஆன நகில்களையுடைய அபிராமவல்லியினது மூங்கில் போன்ற தோள்களும், கரும்பாகிய வில்லும் மலராகிய அம்பும், வெண்மையான பற்களும், மான்போன்ற கண்களும் என் மனத்தில் எப்போதும் காட்சி தருகின்றன.

நூற்பயன்

அனைத்துயிர்க்கும் தாயானவளும், அனைத்து அண்டங்களைப் படைத்தவளும் மாதுளம் பூப்போன்ற நிறமுடையவளும, உலகம் முற்றும் காப்பவளும் கைகளிலே பாசம் அங்குசம் கரும்புவில் என்பவற்றைத் தாங்கியவளும், மூன்று கண்களையுடையவளும் ஆகிய எங்கள் அபிராமவல்லியை (இந்த நூலை ஓதும் வாயிலாக) வழிபடுவோர்க்கு யாதொரு தீமையும் இல்லை; எல்லாம் நல்லனவேயாம்.

திருக்கடவூர்

அபிராமியம்மை பதிகம் - 1

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராதநட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாதஉடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராதகொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்ஒரு
துன்பமில் லாதவாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 1

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரியபுரு வச்சிலைகளும்
கர்ணகுண் டலமும்மதி முகமண் டலமும்நுதற்
கத்தூரிப் பொட்டும் இட்டுக்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழி யும்சிறிய
கொவ்வையின் கனியதரமும்
குமிழனைய நாசியும் குந்தநிகர் தந்தமும்
கோடுசோ பானகளமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பாதமும்
வந்தெனது முன்னின்று மந்தகா சமுமாக
வல்வினையை மாற்றுவாயே
ஆரமணி வானிலுறை தாரகைகள் போலநிறை
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமியே! 2

உ

திருக்கடவூர்

அபிராமியம்மை பதிகம் - 1

(தெளிவுரை)

1. அலைவீசும் பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் திருமாலின் தங்கையே! பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! மறந்து போகாத கல்வி அறிவையும், குறைவில்லாத ஆயுட் காலத்தையும், யாதொரு வஞ்சனையும் கொள்ளாத நண்பர்களையும், பழுதுபடாத வளப்பத்தையும், பொலிவு குன்றாத இளமைப் பருவத்தையும், கொடு நோய்கள் இல்லாத உடம்பையும் கலங்காத மனவுறுதியையும், அன்பு நீங்காத மனைவியையும், பரம்பரை அற்றுப்போகாத மக்கட் பேற்றையும், கீழ்மைப்படாத புகழையும், சொன்னது மாறாத வாக்குறுதியையும், தடங்கல் நேராத கொடைத்தன்மையும், கொடுத்தாலும் குறையாத செல்வத்தையும், வளையாத செங்கோலாட்சியையும் யாதொரு துன்பமும் இல்லாத வாழ்க்கையையும், தூய்மையான உனது திருவடிகளில் வைக்கும் அன்பையும் எனக்குக் கொடுத்து உயர்ந்த அடியார் கூட்டத்தோடு என்னைச் சேர்ப்பாயாக (சுகபாணி - நன்மை செய்யும் திருக்கரத்தை உடையவள். வாமி—இடப்பாகத்தில் இருப்பவள்.)

2. வானத்திலுள்ள விண்மீன்களைப் போல முத்துகளும் மணிகளும் நிறைந்த பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தைவிட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! மேகம் போன்ற கூந்தல் வரியும், அவ்வரியில் அணிந்த மலர்மாலையும், கரியநிறப் புருவமான விற்களும், காதிலணிந்த குண்டலங்களும், சந்திரன் போன்ற முகவட்டமும், நெற்றியிலிட்ட கத்தூரிப்பொட்டும் மையிட்டுக் கூர்மையாகத் திகழும் கடைக்கண்களும். பால் போன்ற இன்சொற்களும் சிறிய கோவைப்பழம் போன்ற உதடுகளும், குமிழம்பூப் போன்ற மூக்கும், ஈட்டி போன்ற கூறிய பற்களும், சங்குக்கு ஒப்பான கழுத்தும், கச்சணிந்து செம்மாந்திருக்கும் அழகிய மார்பகங்களும் (இடுப்பில் அணிந்த) மேகலையும், மணிகளைப் பரலாக இட்ட சிலம்பணிந்த திருவடிகளும் உடையவளாகி வந்து என்முன்னே நின்று புன்சிரிப்பு முடையவளாகி எனது கொடிய வினைகளை எல்லாம் நீக்குவாயாக.

மகரவார் குழல்மேல்[1] அடர்ந்துகுமிழ் மீதினில்
மறைந்துவா ளைத்துரந்து
மைக்கயலை வேண்டி[2] நின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர் களன்றோ
செகமுழுதும் ஒற்றைத் தனிக்குடை கவித்துமேல்
சிங்கா தனத்திலுற்றுச்
செங்கோலும் மநுநீதி முறைமையும் பெற்றுமுகு
திகிரிஉல காண்டுபின்பு
புகர்முகத்து ஐரா வதப்பாக ராகிநிறை
புத்தேளிர் வந்துபோற்றிப்
போகதே வேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடும்சுகிப்பர்
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 3

மறிகடல்கள் ஏழையும் திகிரிஇரு நான்கையும்
மாதிரக் கரிஎட்டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையும் ஓர்
பொறியரவு தாங்கிவரு புவனம்ஈ ரேழையும்
புத்தேளிர் கூட்டத்தையும்
பூமகளை யும்திகிரி மாயவனையும்அரையில்
புலியாடை உடையானையும்
முறைமுறைக ளாய்ஈன்ற முதியவ ளாய்ப்பழைமை
முறைமைதெரி யாதநின்னை
மூவுலகில் உள்ளவர்கள் வாலைஎன் றறியாமல்
மொழிகின்ற தேதுசொல்வாய்
அறிவுநிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 4

---

1. குழைமேல் எனவும், 2. வென்ற எனவும் பாடம் கொண்டு உரை எழுதப்பட்டுள்ளது.

3. எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாதல் போல உலகங்களுக்கெல்லாம் முதல்வியாகிப் பெருகும் பேரின்ப வடிவானவளே! பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! மகாமீன் வடிவான நீண்ட காதணி மீது போரிட்டு வருந்திக் குமிழம்பூப் போன்ற மூக்கின் அருகிலே மறைந்து, வாட்கருவியை விரட்டிக் கரிய கயல் மீனையும் வென்ற உனது செந்தாமரை போன்ற கடைக்கண்களின் திருவருள் வரத்தைப் பெற்றவர்களன்றோ, (இம்மையில்) உலக முற்றும் தமது ஒற்றைக் கொற்றக் குடையைக் கவித்து, அரியாசனத்தில் வீற்றிருந்து, செங்கோலையும் மனுநீதி முறையையும் பெற்றுத் திகிரிமலைவரை ஆட்சி செய்து, அதன்பின்பு (மறுமையில்) வெள்ளையானையாகிய ஐராவதத்தினைச் செலுத்தும் பாகராகி நிறைந்த தேவர்கள் தம் முன் வந்து துதிபாடிப் போகம் நுகரும் தேவேந்திரனே என்று புகழும்படித் தேவலோகத்தில் இந்திராணியுடன் இன்பம் நுகர்வர்.

4. பேரின்பம் நிறையப்பெற்ற உயர்ந்தோர்க்கெல்லாம் பேரின்பக் கடலாக விளங்குபவளே! பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! அலைகள் சுருளும் எழ் கடல்களையும், திகிரிமலையால் சூழப்பட்ட எட்டுத் திசைகளையும், திசைகளின் முடிவெல்லையில் நிற்கும் எட்டு யானைகளையும், எட்டுப் பாம்புகளையும், மகாமேருமலையையும். ஆதாரசத்தியான பெரிய ஆமையையும், ஆதிசேடன் என்னும் ஒரு பாம்பினாலே தாங்கப் பட்டு வருகின்ற பதினான்கு உலகங்களையும், தேவரது கூட்டத்தையும் திருமகளையும், சக்கரத்தை ஏந்திய திருமாலையும், இடுப்பிலே புலித்தோலாடையையுடைய சிவனையும் வரிசை வரிசைகளாகப் பெற்ற முதுமை யுடையவளாய் அந்த முதுமையின் பழைமை வரலாற்றை இன்னதென அறியப்படாத உன்னை மூவுலகிலும் உள்ளவர்கள் ''இளம்பருவப்பெண்'' என்று உண்மையறியாமல் கூறுவதுயாதோ? அதனை எனக்கு விளங்கும் படி சொல்வாயாக.

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியி லேநின்ன தன்ன தன்பெனும் சிறகால்
வருந்தாம லேயணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லானசீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொடுத்தும்
நீடாழி உலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்திபூக்கும்
நின்மலீ! அகிலங்க ளுக்கன்னை என்றோதும்
நீலீ! என் றோதுவாரோ
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 5

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்கல்லிடைப்
பட்டதே ரைக்கும்அன் றுற்பவித் திடுகருப்
பையுறு சீவனுக்கும்
மல்கும் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தினுக்கும்
மற்றுமொரு மூவர்க்கும் யாவர்க்கும் அவரவர்
மனச்சலிப் பில்லாமலே
நல்கும் தொழிற்பெருமை உண்டா யிருந்தும்மிகு
நவநிதி உனக்கிருந்தும்
நாளெருவன் வறுமையில் சிறியனு னல்அந்
நகைப்புனக் கேஅல்லவோ
அல்கலந் தும்பர்கா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 6

5. வெற்றிமயமான நான்கு வேதங்களினுலும் யாகங்களினுலும் உயர்ந்த புகழையுடைய பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! குற்றமற்றவளே! உயிர்களென்னும் பயிர் வாடி விடாமல் தழைத்தோங்கி வளர்ந்து வருமாறு திருவருள் மழையைப் பொழிந்தும், பேரின்பக் கடலில் எவ்வித வருத்தமும் உருமல் உனது அன்பென்னும் சிறகினுலே அணைத்துக் கொண்டும், செங்கோல் வளைந்து விடாதபடி வளரும் சிற்றெறும்பு முதலாக யானைக் கூட்டம் ஈருக உள்ள கோடிக்கணக்கான உயிர் வருக்கங்களுக்கு நுகரும் நுகர் பொருள்களை எல்லாம் குறைவில்லாதபடி கொடுத்தும் வருதலாலே, நீண்ட கடலால் சூழப்பட்ட உலகத்தார் யாவரும் அன்போடு உன் வயிற்றில் தோன்றும் உலகங்கட்கெல்லாம் அன்னை என்று உன்னைச் சொல்லுவார்கள். அங்ஙனமின்றி உன்னை ஜாலக்காரி என்று சொல்லுவார்களோ? (நீலி என்பது நீலநிற முடையாள் என்றும் ஜாலக்காரி என்றும் இரு பொருள்படும்.)

6. இருட்டை உண்டாக்கித் தேவலோகம் வரை உயர்ந்து அதனை அளவெடுக்கின்ற சோலைகளையுடைய பழமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! பலவகைப்பட்ட யானைமுதல் எறும்பு வரையான பற்பல உயிர்களுக்கும் கருங்கல்லில் உள்ளே வாழும் தேரைக்கும், நாள்தோறும் தோன்றுவதும் கருப்பையில் வாழ்வதுமான உயிர்களுக்கும், பெருகி நிற்கும் நடப்பன நிற்பனவான பொருள்களுக்கும், கண்ணிமைக்காத தேவர் கூட்டத்துக்கும், பிரமன் முதலிய மூவர்க்கும் மற்றுமுள்ள யாவர்க்கும் அவ்வவரது மனம் வெறுக்காதபடி கொடுக்கும் கொடைத் தொழிலின் பெருமை உன்னிடம் இருக்கவும், மிகமேம்பட்ட நவநிதிகள் உனக்கு உரிமையாய் இருக்கவும், நான் ஒருவன் மட்டும் வறுமையினுல் எளியவனுக இருந்தால் அதுபற்றி உலகத்தார் எள்ளி நகைக்கும் சிரிப்பு உனக்கல்லவோ வரும்.

நீடுல கங்களுக்கு ஆதார மாய்நின்று
நித்தமாய் முத்திவடியாய
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனைவி யாய்இருந்தும்
வீடுவீ டுகள்தோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்று இலச்சையும்போய்
வெண்துகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமும் கொண்டுகைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்று
உன்மத்த னாகிஅம்மா
உன்கணவன் எங்கெங்கும் ஐயம் புகுந்தேங்கி
உழல்கின்ற தேதுசொல்வாய்
ஆடுகொடி மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 7

ஞானம் தழைத்துன் சொருபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினிற்போய்
நடுவினி லிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றும்உப தேசமுட்கொண்டு
ஈனந் தனைத்தள்ளி எனதுநான் எனுமானம்
இல்லாம லேதுரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப் புதைத்துநெஞ்சு
இருளற விளக்கேற்றியே
வானந்த மானவிழி அன்னமே! உன்னைஎன்
அகத்தா மரைப்போதிலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாததோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 8

7. ஆடி அசையும் கொடிகளையுடைய மாடங்களின் மேலே மகளிர் விளையாடுகின்ற பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! பதினான்கு என நீண்டுயர்ந்த உலகங்களுக்கெல்லாம் ஆதார சக்தியாகியும், எஞ்ஞான்றும் அழியாப் பொருளாகியும், வீடுபேற்றின் வடிவாகியும் நின்று வரன் முறையுடன் முப்பத்திரண்டறங்களையும் வளர்த்து வருகின்ற நீ சிவனுக்கு மனைவியாக இருந்தும், அந்தச் சிவனாகிய உன் கணவன் வீடுகள் தோறும் விரைந்தோடிச் சென்று, கால் தளர்ச்சியுற்று வெட்கம் கெட்டு இடுப்பிலே அணிந்து கொள்ள வெண்மையான ஆடைக்கு விதியற்றுப்போய்த் திகம்பர வேடம் பூண்டு, கையிலே மண்ஓட ஓடு ஒன்றை ஏந்தித் தேசங்கள் தோறும் மனம் தளர்ந்து நின்று பித்தனுமாகி அந்தோ! எவ்விடத்திலும் பிச்சைக்காகச் சென்று ஏங்கித் திரிகின்றது யாதோ? அதனை எனக்கு விளங்கும் படியாகச் சொல்லுவாயாக.

8. பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! வானத்தின் எல்லை வரை நீண்ட விழியையுடைய அன்னபூரணியே! மெய்யறிவு பெருகி உனது உண்மை வடிவை அறிகின்ற அடியாரிடத்திலே சென்று, அவரது நடுவே இருந்து வாழ்ந்து, அவர்க்கு அடிமைத் தொழிலும் செய்து அவர் சொல்லும் உபதேச மொழிகளையும் மனத்துட்கொண்டு, இழி செயல்களைக் கைவிட்டு எனது என்றும் நான் என்றும் சொல்லப்படுகின்ற அபிமானத்தைச் சிறிதுமில்லாத படி விரட்டி, ஐம்பொறிகளாகிய வழிகளையும் இறுக்கமாக மூடி நெஞ்சாகிய கோயிலில் அறியாமையாகிய இருட்டு நீங்கும்படி விளக்கேற்றி வைத்து உன்னை எனது உள்ளத்தாமரையான மலரிலே நிலைபெறுமாறு நினைவிலே இருத்தி, வேறு எக்கவலையு மற்று அதன்பின் வந்த பரவச நிலையையும் அடைந்து அழிவில்லாத ஒப்பற்ற பேரின்பக் கடலில் மூழ்குவது என்றைக்கோ? அதனை அறிவிப்பாயாக.

சலதிஉலகத்திற் சராசரங் களைஈன்ற
தாயாகி னுல்எனக்குத்
தாயல்லவோயான்உன் மைந்தனன் றேஎனது
சஞ்சலம் தீர்த்துநின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முன்தானை யால்துடைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றருகில்யான்
குலவிவிளை யாடல்கொண் டருள்மழை பொழிந்தங்கை
கொட்டிவா என்றழைத்துக்
குஞ்சரமுகன்கந்த னுக்கிளையன் என்றெனைக்
கூறினுல் ஈனம்உண்டோ
அலைகடலி லேதோன் றும் ஆராத அமுதமே!
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 9

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னில்
கணப்போதும் அர்ச்சிக்கிலேன்
கண்போதி னுல்உன் முகப்போது தன்னையான்
கண்டுதரி சனைபுரிகிலேன்
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆலயத்தின்
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்
ரோமசமே போய்உழன்றேன்
மைப்போத கத்திற்கு நிகரெனப் போதெரு
மைக்கடா மீதேறியே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங் கித்தியங்கும்
அப்போது வந்துன் அருட்போது தந்தருள்
ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 10

9. அலைவீசும் திருப்பாற்கடலில் காட்சியளிக்கும் ஆராவமுதே! (வைஷ்ணவியே) பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப்பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! கடல் சூழ்ந்த உலகத்தில் நடப்பனவும் நிற்பனவுமானவற்றைப் பெற்ற தாய் நீ என்றால் எனக்கும் நீ தாயன்றோ; நான் உனக்கு மகனன்றோ! எனது துன்பத்தை நீக்கி உனது மார்பிலிருந்து பொலிந்து ஒழுகுகின்ற பாலை ஊட்டி எனது முகத்தை உனது முன் தானையால் துடைத்துவிட்டு, நான் பேசும் மழலைச் சொல்லுக்கு மனம்மகிழ்ந்து, எனது இளைய நிலாப் போன்ற புன்சிரிப்புக்கு இன்பமுற்று, உனது அருகில் யான் பொருந்தி விளையாடுவதை ஏற்றுக் கொண்டு, திருவருள் மழையைப் பொழிந்து அழகிய கையைக் கொட்டி வருக என்று என்னை அழைத்து விநாயகனுக்கும் முருகனுக்கும் இளைய தம்பி என்று என்னைச் சொன்னால் உனக்கு ஏதேனும் இழிவுண்டாகி விடுமோ? சொல்வாயாக.

10. பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப்பாகத்தை விட்டுப்பிரியாத சுகபாணியே! அருள்மிக்கவாமியே! அபிராமி அம்மையே! நான் எனது கைகளிலே மலர்களை ஏந்தி உனது திருவடித் தாமரைகளில் ஒரு கண நேரங் கூட அருச்சனை செய்யவில்லை: எனது கண்மலர்களினால் உனது முகத்தாமரையைத் தரிசனம் செய்ய வில்லை; காலை உச்சி அந்தி என்னும் மூன்று வேளைகளில் ஒரு வேளைகூட எனது மனத்தாமரையில் உன்னை நினைந்து உனது திருக்கோயிலுக்கு வருகின்ற அடியார்களின் பின்னே நானும் வர நினைக்க வில்லை; வீண்செயல்களிலே சென்று திரிந்து விட்டேன். (எனினும் என் பொருட்டு நீ ஒரு உதவி செய்ய வேண்டும். அதாவது) கரிய யானைக்கு ஒப்பென்று சொல்லும்படி வருகின்ற எருமைக்கடாவின் மேலே ஏறிக்கொண்டு மிகக்கொடிய யமன் வரும்போது தனித்துள்ள நான் மனம் கலங்கி மயங்கும் அந்நேரத்தில் என்முன்னே வந்து உனது திருவருள் மயமான திருவடிப்போதுகளை வழங்குவாயாக.

மிகையும் துரத்தவெம் பிணியும் துரத்த
வெகுளியா னதும்துரத்த
மிடியும் துரத்தநரை திரையும் துரத்தமிகு
வேதனை களுந்துரத்தப்
பகையும் துரத்தவஞ் சனையும் துரத்தப்
பசிஎன்ப துந்துரத்தப்
பாவம் துரத்தப்பதி மோகம் துரத்தப்
பலகாரிய முந்துரத்த
நகையும் துரத்தஊழ் வினையும் துரத்த
நாளும் துரத்தவெகுவாய்
நாவரண் டோடிகால் தளர்ந்திடும் என்னை
நமனும் துரத்துவானோ
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே! 1

திருக்கடவூர்

அபிராமியம்மை பதிகம் - II

கங்கையொடு தும்பையும் அணிந்தவர் வியக்கும
கலாமதியை நிகர் வதனமும்
கருணைபொழி விழிகளும் விண்முகில்கள் வெளிறெனக்
காட்டிய கருங்கூந்தலும்
சங்கையில் லாதொளிரு மாங்கல்ய தாரணம்
தங்குமணி மிடறுமிக்க
சதுர்பெருகு துங்கபா சாங்குசம் இலங்குகர
தலமும்விர லணியும்அரவும்
புங்கவர்க் கமுதருளும் அந்தர குசங்களும்
பொலியுநவ மணிநூபுரம்
பூண்டசெஞ் சேவடியை நாளும் புகழ்ந்துமே
போற்றிஎன வாழ்த்த விடைமேல்
மங்களம் மிகுந்தநின் பதியுடன் வந்தருள்செய்
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி!சுப நேமி புகழ் நாமி சிவ சாமிமகிழ்
வாமி! அபிராமி உமையே! 1

11. எல்லா உலகங்கட்கும் ஆதாரசத்தியே! பழைமையான திருக்கடவூரில் வாழும் இறைவியே! அமிர்தகடேசுவரரின் இடப் பாகத்தை விட்டுப் பிரியாத சுகபாணியே! அருள்மிக்க வாமியே! அபிராமி அம்மையே! அறிவாலும் உடல் வலிமையாலும் மிகைப் பட்டோர் ஒருபுறம் துரத்தவும், கொடிய நோய்கள் மறுபுறம் துரத்தவும், சினம் இன்னொரு புறம் துரத்தவும், வறுமை ஒரு பக்கம் விரட்டவும், நரையும் திரையுமான மூப்பு மறுபக்கம் விரட்டவும், மனத்துயரங்கள் இன்னொரு பக்கம் விரட்டவும், பகைவர்கள் ஒருபால் நெருக்கவும், நம்பினோர் செய்த வஞ்சனை மறுபால் நெருக்கவும், பசி என்பது வயிற்றிலே நெருக்கவும், முன்செய்த பாவங்கள் ஓரிடத்தே உந்தவும், தலைமைப் பேற்றிலே கொண்ட ஆசை மற்றோரிடத்தே உந்தவும், செயலாற்ற வேண்டிய பல்வேறு காரியங்களும் உந்தவும், தவறு கண்டு ஊரார் நகைக்கும் நகை ஒரு பக்கம் துரத்தவும், ஊழ்வினைகள் மற்றோர் பக்கம் துரத்தவும், ஆயுள் நாள் இன்னொரு பக்கம் துரத்தவும், மிகவும், நாக்குவரண்டு பலவிடங்களிலும் ஓடிக் காலும் தளர்ந்து போகும் என்னை யமனும் துரத்துவானோ? (நீ துணையாக இருப்பதால் துரத்த மாட்டான்).

அபிராமியம்மை பதிகம் - II

1. புகழ் முதலாயின வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! புகழ்ந்து கூறும் திருநாமங்களையுடையவளே! சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமா தேவியே! கங்கையாற்றோடு தும்பை மலரையும் அணிந்த சிவனார் வியக்கும்படி, பதினாறு கலைகளும் நிறைந்த சந்திரனை ஒத்த திருமுகத்தையும், திருவருள் பொழியும் கடைக்கண்களையும் வானிலுள்ள கருமேகமும் வெண்மை என்று காண்பித்த கரிய கூந்தலையும், ஐயமின்றி ஒளி வீசும் திருமாங்கல்யதாரணம் நிலையாகத் தங்கியுள்ள கழுத்தையும், மிக்க சாமர்த்தியம் பெருகுகின்ற தூயபாசம் அங்குசம் என்பவை விளங்கும் திருக்கரங்களையும், விரலிலே அணிந்த ஆழியையும், பாம்பு போன்ற அடிவயிற்றையும், சிவபிரானுக்கு அமுதத்தைத் தருகின்ற மேல் நோக்கிய மார்பகங்களையும், அழகிய நவமணிப் பரல்கள் இட்ட சிலம்பணிந்த சிவந்த திருவடிகளையும் அடியேன் நாடோறும் புகழ்ந்து போற்றிக்கூறி வாழ்த்துதற்கு நீ இடப வாகனத்தின் மேலே நன்மைமிக்க நின் கணவருடன் வெளிப் பட்டு வந்து திருவருள் புரிவாயாக.

சந்திர சுடாதரி! முகுந்தசோதரி! துங்க
சலசலோ சனமாதவி!
சம்ப்ரம பயோதரி! சுமங்கலி! கலட்சணி!
சாற்றருங் கருணைகரி!
அந்தரி! வராகி! சாம்பவி! அமரதோதரி!
அமலை! செக சாலசூத்ரி!
அகிலாத்ம காரணி! விநோதசய நாரணி!
அகண்ட சின் மயபூரணி!
சுந்தரி நிரந்தரி! வரைராச
சுகுமாரி! கௌமாரி! உத்
துங்ககல் யாணி! புஷ் பாஸ்திராம் புயபாணி!
தொண்டர்கட் கருள் சர்வாணி!
வந்தரி மலர்ப்பிரம ராதிதுதி வேதவொலி
வளர் திருக் கடவூரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபி ராமி! உமையே! 2

வாசமலர் மருவளக பாரமும் தண்கிரண
மதிமுகமும் அயில்விழிகளும்
வள்ளம்நிகர் முலையும்மான் நடையும்நகை மொழிகளும்
வளமுடன் கண்டுமின்னார்
பாசபந் தத்திடை மனங்கலங் கித்தினம்
பலவழியும் எண்ணிஎண்ணிப்
பழிபாவம் இன்னதென் றறியாமல் மாயப்ர
பஞ்சவாழ் வுண்மை என்றே
ஆசைமே லிட்டுவீ ணாகநாய் போல்திரிந்
தலைவதல் லாமல்உன் றன்
அம்புயப் போதெனும் செம்பதம் துதியாத
அசடன்மேல் கருணைவருமோ
மாசிலா தோங்கிய குணாகரி! பவானி! சீர்
வளர் திருக் கடவூரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 3

2. திருமால், தாமரையிலுள்ள பிரமன் முதலியோர் வந்து துதிக்கும் துதி ஒலியும், வேத ஒலியும் வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! புகழ்ந்து கூறும் திருநாமங்களையுடையவளே! சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே! சந்திரனைச் சூடிய சடையுடையவளே! திருமாலுக்குத் தங்கையே! சிறந்த நீலோற்பலம் போன்ற கண்களையுடையவளாய்ப் பெரிய தவம் செய்வோளே! மகிழ்ச்சியான மார்பகங்களையுடையவளே! சுமங்கலியே! இலட்சணங்கள் யாவும் நிறைந்தவளே! சொல்லொணுத திருவருட்கு இருப்பிடமானவளே! விண்ணுலகத்தவளே! வராகரின் சத்தியே! சிவனின் சத்தியே! தேவர்களால் புகழப்படுபவளே! மலமாசற்றவளே உலகில் மாயாஜாலம் செய்யும் தலைவியே! அனைத்துயிர்க்கும் மூல காரணமானவளே! விளையாட்டாக வெற்றி, கொள்ளும்! நாரணரின் சத்தியே! பிரிவற்ற அறிவு மயமாய் நிறைந்தவளே! அழகானவளே! நிலையாயுள்ளவளே! காப்பவளே! மலையரசனுக்கு நன்மகளே! முருகனின் சத்தியே! மேலான கல்யாண குணங்களையுடையவளே! மலரம்புகளை ஏந்திய தாமரைக்கரங்களையுடையவளே! எல்லாமானவளே! தொண்டரான எங்கட்கு அருள்புரிவாயாக.

3. குற்றமின்றி உயர்ந்த குணக்கடலே! பிறப்பொழிப்பவளே! புகழ் வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! புகழ்ந்து கூறும் திருநாமங்களையுடையவளே! சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே மணமுள்ள மலரணிந்த கூந்தலும், குளிர்ந்த ஒளிமிக்க மதி போன்ற முகமும், கூர்மையான கண்களும் கிண்ணம் போன்ற மார்பகங்களும், மான்போன்ற நடையும், சிரித்துப் பேசும் பேச்சும் சிறந்திருப்பதைக் கண்டு மகளிரின் ஆசைத் தொடக்கிலே அகப்பட்டு மனம்கலங்கி நாடோறும் பலவாறுக எண்ணிப் பழிபாவங்களை அறியாமல் பொய்யான உலக வாழ்வை மெய்யென்று நம்பி ஆசை மேம்பட்டு வீணுக நாயைப் போல் திரிவதேயன்றி உனது தாமரை மலர் போன்ற திருவடிகளைப் போற்றிப் புகழாத கீழ்மகனை என்னிடம் உனக்குப் பரிவுண்டாகுமோ? (உண்டாகாது எனினும் பரிவு காட்டுவாயாக).

நன்றென்று தீதென்று நவிலும் இவ் விரண்டினுள்
நன்றதே உலகிலுள்ளோர்
நாடுவர் ஆதலின் நானுமே அவ்விதம்
நாடினேன் நாடினும்
இன்றென்று சொல்லாமல் நினது திருவுள்ளமது
இரங்கி அருள் செய்குவாயேல்
ஏழையேன் உய்குவேன் மெய்யான மொழியிஃதுன்
இதயமறியாததுண்டோ
குன்றமெல் லாம்உறைந் தென்றுமன் பர்க்கருள்
குமரதேவனை அளித்த
குமரி! மரகதவருணி! விமலி! பைரவி! கருணை
குலவுகிரி ராசபுத்ரி!
மன்றல்மிகு நந்தன வனங்கள் சிறை அளிமுரல
வளர் திருக் கடவூரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபி ராமி! உமையே! 4

ஒருநாள் இரண்டுநாள் அல்லநான் உலகத்து
உதித்த இந் நாள் வரைக்கும்
ஒழியாத கவலையால் தீராத இன்னல் கொண்டு
உள்ளம் தளர்ந்து மிகவும்
அருநாண் இயற்றிட்ட விற்போல் இருக்கும்இவ்
அடிமைபால் கருணைகூர்ந்து
அஞ்சேல் எனச்சொல்லி ஆதரிப் பவர்கள் உனை
அன்றி இலை உண்மையாக
இருநாழி கைப்போதும் வேண்டாது நிமிடத்தில்
இவ்வகில புவனத்தையும்
இயற்றி யருளும்திறம் கொண்டநீ ஏழையேன்
இன்னல்தீர்த் தருளல் அரிதோ
வருநாவ லூரர்முத லோர்பரவும் இனியபுகழ்
வளர் திருக் கடவூரில் வாழ்
வாமி! சுபநேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி! அபி ராமி! உமையே! 5

4. குன்றுகள் தோறும் தங்கி எப்போதும் அடியவர்களுக்கு அருள்புரிகின்ற முருகக் கடவுளைப் பெற்றளித்த குமரியே மரகத மணிபோன்ற பசுமை நிறத்தவளே! மலங்களை நீக்குவிப்பவளே! பைரவியே! பரிவுபொருந்திய மலையரசனின் மகளே! சிறகுகளை யுடைய வண்டுகள் ஒலிக்கும்படி மணம்மிக்க நந்தவனங்கள வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! புகழ்ந்து கூறும் திருநாமங்களையுடை யவளே!சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே அபிராமியே! உமாதேவியே! நல்லதென்றும் கெட்டதென்றும் சொல்லப்படுகிற இவ்விரண்டிலே தம் மனத்துக்கு நல்லதென்று பட்டதையே உலகத்தவர்கள் விரும்புவார்கள். ஆகவே நானும் அப்படியே விரும்பினேன் அங்ஙனமே (மனம்போன போக்கில்) விரும்பினால் எனக்கு உனது திருவருளை இல்லை என்று சொல்லி விடாதபடி உன் உளமிரங்கி அருள் செய்வாயானால் எளியேன் உய்தி பெறுவேன். இது உண்மைச் சொல்லாகும். இதனை உன் திருவுளம் அறியாதிருப்பது உண்டோ? நன்றாக அறியும்.

5. (மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடக் கயிலாயத்தி லிருந்து வந்து அவதாரம் செய்த) சுந்தரமூர்த்திகள் முதலியோர் பாடிப் பரவிய சிறந்தபுகழ் வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! புகழ்ந்து கூறும் திருநாமங்களையுடையவளே! சிவபெருமான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே! ஒரு நாளோ இரண்டு நாளோ அல்ல; நான் உலகத்தில் பிறந்த இந்த நாள் வரையிலும் நீங்காத மனக் கவலையினால் ஒழியாத உடல் துன்பமும் கொண்டு மிகவும் மனத்தளர்ச்சியுற்று, நாண்பூட்டிய வில்லானது அம்பு எய்யாமையால் பயனற்றிருப்பது போலப் பிறவி எடுத்தும் உன்னை வணங்காமையால் நற்பேறு பெறாமல் பயனற்றிருக்கும் அடியேனிடம் பரிவு கொண்டு "அஞ்சாதே" என்று அபயமளித்துக காப்பாற்றுகின்றவர்கள் நிச்சயமாக உன்னைத் தவிர வேறுயாரும் இல்லை. இரண்டு நாழிகை நேரம் கூட வேண்டாமல் ஒரு நிமிட நேரத்துக்குள் இந்த உலக மனைத்தையும் தோற்றுவித்தருளும் திறமை கொண்டவள் நீ. அப்படிப்பட்ட உனக்கு எளியேனது துன்பத்தை நீக்கியருளுவது அருமை யாகுமோ?

எண்ணிக்கை இல்லாத துன்பங்கள் மேன்மேல்
ஏறிட்டொறுக்க அந்தோ
எவ்விதம் உளம்சகித் துய்குவேன் இப்பொழுது
எடுத்திட்ட சன்மம் இதனில்
நண்ணிஎள் ளளவுசுக மானதொரு நாளினும்
நான் அனுபவித்ததில்லை
நாடெலாம் அறியுமிது கேட்பதேன் நின்னுளமும்
நன்றாய் அறிந்திருக்கும்
புண்ணியம் பூர்வசனனத்தினில் செய்யாத
புலையனுனும் நினது
பூரண கடாட்சவீட் சண்ணியம் செய்தெனது
புன்மையை அகற்றியருள்வாய்
மண்ணவர்கள் விண்ணவர்கள் நித்தமும் பரவுமிசை
வளர் திருக் கடவூரில்வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி! அபி ராமி! உமையே! 6

தெரிந்தோ அலாதுதெரியாமலோ இவ்வடிமை
செய்திட்ட பிழை இருந்தால்
சினங்கொண் டதோர்கலைக் காகவை யாதுநின்
திருவுளம் இரங்கிமிகவும்
பரிந்துவந் தினியேனும் பாழ்வினையில் ஆழ்ந்தினல்
படாதுநல் வரம் அளித்துப்
பாதுகாத் தருள்செய்ய வேண்டும் அண் டாண்ட உயிர்
பரிவுடன் அளித்த முதல்வி!
புரந்தரன் போதன்மா தவன்ஆதி யோர்கள் துதி
புரியும்பா தாம்புயமலர்ப்
புங்கவி! புராந்தகி! புரந்தவி! புராதனி!
புராணி! திரிபுவனேசுவரி!
மருந்தினும் நயந்தசொற் பைங்கிளி! வராகி! எழில்
வளர் திருக் கடவூரில்வாழ்
வாமி!சுப நேமி! புகழ் நாமி! சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 7

6. மண்ணக மனிதரும் விண்ணகத் தேவரும் வந்து நாள் தோறும் வழிபட்டுப் போற்றுகிற புகழ் வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே! அளவற்றதான துன்பங்கள் மேலும் மேலும் வந்து வருத்துவதனால் அந்தோ அவற்றை மனத்தினாலே பொறுத்துக் கொண்டு எங்ஙனம் நான் பிழைப்பேன்? இப்போது எடுத்துள்ள பிறவியிலே பொருந்து எள்ளளவான சிறிய சுகத்தைக் கூட ஒருநாளும் நான் நுகர்ந்ததில்லை. இதனை விசாரித்தறியப் பிறரைக் கேட்பது ஏன்? கேட்கவேண்டாம். இதனை உலகத்தார் யாவரும் நன்றாகத் தெரிந்துள்ளார்கள். உன்னுடைய திருவுள்ளமும் நன்றாகத் தெரிந்திருக்கும். நான் எடுத்த முற்பிறவிகளிலே புண்ணியத்தைச் செய்யாத இழிந்த குணத்தவன் ஆயினும் உனது நிறைந்த கடைக்கண் பார்வையைத் தந்து எனது இழிவை நீக்கியருள்வாயாக.

7. அண்டங்கள் தோறும் உள்ள உயிர்கள் அனைத்தையும் பரிவோடு காப்பாற்றி வருகின்ற தலைவியே! இந்திரன், நான்முகன் திருமால் முதலானவர்கள் வணங்கிப் போற்றி இசைக்கின்ற திருவடித் தாமரைகளையுடைய விழுமியவளே! முப்புரங்களை அழித்தவளே! வழிபடத்தக்கவளே! பழமையான பொருளில் உறைபவளே! தொன்மையானவளே! மூவுலகுடையாளே! அமிர்தத்தைவிட மேலாகவிரும்பப்படும் சொற்களைப் பேசும் பசிய கிளிபோன்றவளே! வராகரின் சக்தியே! அழகு வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தை யுடையவளே! சிவபெருமான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே! அடிமையாகிய நான அறிந்தோ அல்லது அறியாமலோ செய்தனவாகிய குற்றங்கள் இருந்தால் என்மீது வெகுளிகொண்டு அவற்றை ஒரு கணக்கிலே சேர்க்காமல் உனது திருவுள்ளம் இரங்கி மிகவும் பரிவுகாட்டி என்முன்னே வந்து இனிமேலாவது நான் தீவினைகளிலே மூழ்கித் துன்பப்படாமல் இருக்கும்படி நல்லவரங்களைத் தந்து காப்பாற்றி அருள்செய்ய வேண்டும்.

வஞ்சக் கொடியோர்கள் நட்புவேண் டாமலும்
மருந்தினுக் காவேண்டினும
மறந்தும்ஓர் பொய்ம்மொழி சொல்லாமலும் தீமையாம்
வழியினிற் சொல்லாமலும்
விஞ்சுநெஞ் சதனிற் பொருமைதரி யாமலும்
வீண்வம்பு புரியாமலும்
மிக்கபெரி யோர்கள்சொலும் வார்த்தைதள் ளாமலும்
வெதுளியவை கொள்ளாமலும்
தஞ்சமென நினதுஉபய கஞ்சம் துதித்திடத்
தமியேனுக் கருள்புரிந்து
சர்வகா லமும்எனைக் காத்தருள வேண்டினேன்
சலக்கயல்கள் விழியைஅணைய
வஞ்சியர்செவ் வர்ய்நிகரு வாவிஆம பல்மலரும்
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி!உமையே! 8

எனதின்னல் இன்னபடி என்றுவே ரொருவர்க்கு
இசைத்திடவும் அவர்கள்கேட்டிவ்
இன்னல்தீர்த் துள்ளத் திரங்கிநன் மைகள்செயவும்
எள்ளளவும் முடியாது நின்
உனதமமரு வுங்கடைக் கண்ணருள் சிறிதுசெயின்
உதவாத நுண்மணல்களும்
ஓங்குமாற் றுயர் சொர்ண மலையாகும் அதுவன்றி
உயரகில புவனங்களைக்
கனமுடன் அளித்துமுப் பத்திரண் டறங்களும்
கவின்பெறச் செய்யும் நின்னைக்
கருதுநல் லடியவர்க் கெளிவந்து சடுதியில்
காத்துரட்சித்ததோர்ந்து
வனசநிகர் நின்பாதம் நம்பினேன் வந்தருள்செய்
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 9

8. பெண்களின் கண்போன்ற நீர்வாழ் கயல்மீன்களும் அப்பெண்களின் வாயைப்போன்ற ஆம்பல் பூக்களும் குளங்களிலே வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! புகழ்ந்து கூறும் திருநாமங்களை யுடையவளே! சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே! மனத்திலே வஞ்சகத் தைக்கொண்ட தீயவர்களின் நட்பை விரும்பாதபடியும் மருந்துக்கு வேண்டும் என்றாலுமகூட மறந்தும்கூடப் பொய்யான சொல்லைப் பேசாதபடியும், கெட்டவழிகளிலே செல்லாதபடியும் விரிந்த மனத்திலே பொருமைக் குணத்தை ஏற்காதபடியும், கோபம் முதலிய தீக்குணங்களைக் கொள்ளாதபடியும், என்னைக் காத்தருள வேண்டுகிறேன்; மேலும் அடைக்கலம் என்று உனது திருவடித் தாமரை இரண்டையும் போற்றிப் பரவுமாறு அடியேனுக்குத் திருவருள் சுரந்து எக்காலமும் என்னைக் காத்தருள வேண்டுகிறேன்.

9 புகழ்வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே! எனது துன்பங்கள் இன்னபடி உள்ளன என்று மற்றொருவருக்கு எடுத்துக் கூறுவதென்பதும், மற்றவர்கள் அதனைக் கேட்டு மனதிலே இரக்கம் கொண்டு அத்துன்பங்களை நீக்கி நன்மை செய்வதென்பதும் எள்ளளவும் முடியாத காரியமாகும். மேன்மைபொருந்திய உனது கடைக்கண்களின் அருளைச் சிறிது செலுத்தினல் ஒன்றுக்கும் உதவாத நுண்ணிய மணல் தூசிகள் கூட ஓங்கி உயர்ந்த மாற்று மிக்க பசும்பொன்மலைகளாக ஆகிவிடும். அதுமட்டுமல்லாமல் அடுக்காய் உயர்ந்த பதினன்கு உலகமனைத்தையும் சிறப்புடன் தோற்றுவித்து முப்பத்திரண்டறங்களையும் அழகாகச் செய்யும் உன்னை நினைத்து வழிபடும் அடியார்களுக்கு எளிதாக வெளிவந்து விரைவாகக் காத்தருளும் திறத்தினை அறிந்து தாமரையை ஒத்த உனது திருவடிகளையே புகலாக நம்பி உள்ளேன். ஆகவே அடியேன் முன்னும் வெளிவந்து காத்தருள் வாயாக.

கருநீல வடிவமார் மாடேறி உத்தண்ட
கனதண்ட வெம்பாசமும்
கைக்கொண்டு சண்டமா காலன்முன் எதிர்க்க மார்க்
கண்டன் வெருண்டுநோக்க
இருநீல கண்டன்எனும் நின்பதியை உள்ளத்தில்
இன்புகொண் டருச்சனைசெய
ஈசன்அவ இலிங்கம் பிளப்பநின் றெடுதோன்றி
யமனைச்சூ லத்திலூன்றிப்
பெருநீல மலைஎன நிலத்தில்அன் னவன்விழப்
பிறங்குதா ளால்உதைத்துப்
பேசுமுனி மைந்தனுக் கருள்செய்த துனதரிய
பேரருளின் வண்ணமலவோ
வருநீலம் மடமாதர் விழிஎன்ன மலர்வாவி
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 10

சகலசெல் வங்களும் தரும்இமய கிரிராச
தனயை!மா தேவி! நின்னைச்
சத்யமாய் நித்யமாய்உள் ளத்தில் துதிக்கும்உத்
தமருக்கு இரங்கிமிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி
ஆகுநல் லூழ்நுகர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப்பாய்
சுகிர்தகுண சாலி!பரி பாலி!அநு கூலி!திரி
சூலி!மங் களவிசாலி!
மகவுநான் நீ தாய் அளிக்கொணு தோமகிமை
வளர்திருக் கடவூரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே! 11

10. மடப்பம் மிக்க மகளிரின் கண்களைப்போல நீலப்பூக்கள் அகன்ற குளங்களிலே வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம்செய்யும் சக்கரத்தையுடையவளே! புகழ்ந்து கூறும் திருநாமங்களையுடையவளே! சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே! கரிய நீல நிறம் பொருந்திய எருமைக்கடாவின் மேலே ஏறிக்கொண்டு, உத்தண்டம் கனதண்டம் என்ற பெயர்களை உடைய கொடிய பாசக்கயிறுகளைக் கையிலே ஏந்திக் கோபம் மிக்ககொடிய பாசக்கயிறுகளைக் கையிலே ஏந்திக் கோபம் மிக்க கொடிய யமன் மார்க்கண்டேயனின் முன் எதிர்த்தான். எதிர்க்கவே மார்க்கண்டேயன் பயந்து நோக்கிக்கரு நீலகண்டன் என்னும் உன் கணவனை மனத்தில் நினைந்து மகிழ்வோடு அருச்சித்தான். அங்ஙனம் அருச்சித்தலால் சிவபிரான் இலிங்கம் பிளக்கும்படி உன்னோடு வெளிப்பட்டு யமனைச் சூலத்தால் குத்திப் பெரிய கருமையான மலைபோல் அந்த யமன் நிலத்தில் விழும்படி இடது திருவடியால் உதைத்து மிருக்கண்டுய முனிவரின் மகனை மார்ககண்டேயனுக்கு அருள்செய்தார். அங்ஙனம் அருள் செய்தது உன்னுடைய பேருளின் திறமன்றோ" (இடதுகாலால் உதைத்தமையால் அம்மையின் பேரருள் திறமாயிற்று.)

11. நற்குணங்கள் நிறைந்தவளே! அனைத்துலகையும் ஆள்பவளே! துணையாயிருப்பவளே! முத்தலைச் சூலம்ஏந்தியவளே! நன்மை வடிவான தடங்கண்ணியே! பெருமை வளர்கின்ற திருக்கடவூரில் வாழும் அழகியே! நலம் செய்யும் சக்கரத்தையுடையவளே! சிவபிரான் மகிழும்படி அவரது இடப்பாகத்தில் இருப்பவளே! அபிராமியே! உமாதேவியே! செல்வமெல்லாம் தருகின்ற இமயமலையரசனின் மகளே! பெருந்தேவியே! உன்னை உண்மையாக நாடோறும் மனத்திலே வைத்துப் போற்றுகின்ற உத்தமரான அடியார்களுக்குப் பெரிதும் இரங்கி இவ்வுலகில் நோயற்ற வாழ்வும், கல்வியறிவும், செல்வமும், தானியமும், அழகும் புகழும், பெருமையும், இளமையும், இயற்கையறிவும், மக்கட்பேறும், உடல்வலிமையும், மனத்துணிவும், நீண்ட ஆயுளும், வெற்றியும், நன்னெறியான நீதியும், போகநுகர்ச்சியும் என்று தொகையாக எண்ணப்படுகிற பதினாறு பேறுகளையும் கொடுத்தளித்துச் சுகமான பேரின்பவாழ்வையும் நீ கொடுப்பாய். நான் உன் குழந்தை, நீ என் தாய் என்றால் எனக்கு அப்பேறுகளைத் தரக்கூடாதோ? தந்தருள்வாயாக.

காலத் தொடுகற் பனைகடந்த
கருவூலத்துப் பழம்பாடல்
கலைமாச் செல்வர் தேடிவைத்த
கடவுள் மணியே. உயிரால
வாலத் துணர்வு நீர்பாய்ச்சி
வளர்ப்பார்க் கொளிபூத் தளிபழுத்த
மலர்க்கற் பகமே! எழுதாச்சொல்
மழலை ததும்பு பசுங்குதலைச்
சோலைக் கிளியே! உயிர்த்துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
துரியங் கடந்த பரநாத
மூலத் தலத்து முளைத்தமுழு
முதலே! முத்தம் தருகவே!
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய்! முத்தம் தருகவே!

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே! எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள் ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே! மதுகரம்வாய்
மடுக்கும் குழற்கா டேந்தும்இள
வஞ்சிக் கொடியே! வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே! வருக வருகவே.

'ஸ்ரீ குமரகுருபரர்'

சமய இலக்கியத் திங்கள் இதழ்

சந்தா விபரம்

ஆயுள் சந்தா	(உள்நாடு)	ரூ.	200-00
,,	(வெளிநாடு)	ரூ.	600-00
ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	ரூ.	20-00
,,	(வெளிநாடு)	ரூ.	80-00

M. O. அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாக ஆசிரியர்' "ஸ்ரீ குமரகுருபரர்"
ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்-612504